# ஜி.சி.ஈ. பரீட்சை மீண்டும் நடத்த வேண்டிய அவசியம் ஏற்படவில்லை

## அதிகாரி அறிவிப்பு


Registered as a News Paper in Ceylon     விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 317
தேசிய தினசரி

சுழுபவமைம் மார்கழி 11 ஷவ்வால் 26 சனிக்கிழமை (26-12-70)



திருவெம்பாவை
பூசையை
முன்னிட்டு
திறமான
சர்க்கரை
மொத்தமாகவும்-சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.
ஆ வைத்திலிங்கம் & கோ.
45, கே.கே.எஸ். ரோட்; யாழ்ப்பாணம்.
போன்: 663


கோட்டை, வெள்ளி

ஜி. சி. ஈ. சாதாரண பரீட்சையை ரத்துச் செய்துவிட்டு, திரும்பவும் பரீட்சையை நடத்துவது பற்றிய தீர்க்கமான முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை என்று கல்விப் பகுதியைச் சேர்ந்த உயர்தர அதிகாரி ஒருவர் நேற்றுத் தெரிவித்தார்.

விஞப் பத்திரங்கள் வெளியானது சம்பந்தமாக நாரஹேன்பிட்டிப் பொலிசாரால் கைது செய்யப்பட்ட 3 மாணவர்களும் விசாரணைக்கு படுத்தப் பட்டனர்.

பௌதிகம், இரசாயனம், கணிதம், உயிரியல் போன்ற பாடங்களுக்குரிய வினாத்தாள் பரீட்சைக்கு முன்னரே வெளியாகிவிட்டதாக நிலவிவரும் வதந்திகள் பற்றி இரகசிய பொலிசார் ஆராய்ந்துவருவதாகவும், பொலிசாரின் அறிக்கை கிடைத்ததும் பரீட்சையை திரும்ப நடத்த வேண்டி ஏற்படுமா என்பது பற்றி கல்வி அமைச்சு ஆராயும் என்றும் அந்த அதிகாரி சொன்னார்.

இதுவரை நடைபெற்று முடிந்த எண்கணிதம், பொருளாதாரம் ஆகிய வினாத்தாள் ஏற்கனவே வெளியாகிவிட்டதாக பரீட்சைப் பகுதி திட்டவட்டமாக அறிந்துகொண்ட பின்னரே அப் பரீட்சைகள் ரத்துச் செய்யப்பட்டதாகவும் ஏனைய பாடங்களைத் திரும்ப வைக்க வேண்டிய நிலை இதுவரை ஏற்படவில்லையென்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

இது இவ்வாறிருக்க பரீட்சை வினாத்தாள் வெளிவந்தது சம்பந்தமான விசாரணை அறிக்கையை அட்டோர்னி ஜெனரலிடம் சமர்ப்பித்து சட்ட ஆலோசனை பெறப்படவிருப்பதாகவும் தெரிகிறது. இரகசிய பொலிஸ் விசாரணைப் பிரிவு சுப்ரிண்டன் திரு. ஜே ஏ. செல்வரத்தினம் தலைமையிலான பொலிஸ் கோஷ்டி வினாத்தாள் சம்பந்தமான விசாரணையில் துரிதமாக ஈடுபட்டுள்ளது. எண்கணித வினாத்தாளை அரசாங்க அச்சகத்திலிருந்து வெளியே கொண்டுவந்ததாகக் கருதப்படும் அச்சுக்கோப்பாளர் ஒருவரும் விசாரணையின்பின்னர் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

இப் பரீட்சை முழுவதையும் திரும்ப வைப்பதானால் அரசாங்கத்துக்கு 25 லட்சம் ரூபா நஷ்டமேற்படும் என்றும், வினாத்தாள் வெளியானது பற்றிய வதந்திகளில் உண்மையில்லை என்றும் பரீட்சையை திரும்ப நடத்த வேண்டிய நிலை ஏற்படாதென்றும் கல்வி அமைச்சர் ஏற்கனவே அறிவித்திருந்தது தெரிந்ததே.

## சென்னை இசை விழாவில் பிரமிளா இன்று பாடுகிறார்

சென்னை, டிச, 26

தமிழ்நாட்டில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் இசை விழாவில் இலங்கையைச் சேர்ந்த குமாரி பிரமிளாவின் பாட்டுக்கச்சேரி இன்று தமிழ் இசைச் சங்கத்தின் ஆதரவின்கீழ் ராஜா அண்ணாமலை மன்றத்தில் நடைபெறவிருக்கிறது.

இன்றைய நிகழ்ச்சிகள்:

தமிழ்இசைச் சங்கத்தின் ஆதரவின்கீழ் ராஜா அண்ணாமலை மன்றத்தில்:

இரவு 6-00 தண்டபாணி தேசிகர் — பாட்டு.

இரவு 9-30 குமாரி பிரமிளா — பாட்டு, ஆர். எஸ். கோபாலகிருஷ்ணன் -- வயலின், பாலக்காடு கிருஷ்ணமணி -- மிருதங்கம், ஆலங்குடி இராமச்சந்திரன் — கடம், மன்னார்குடி ராஜகோபாலன் — கஞ்சிரா, மகாதேவன் —மோர்சிங்.

இந்தியன் பைன் ஆர்ட்ஸ் சங்கத்தின் ஆதரவின் கீழ்

(4-ம் பக்கம் பார்க்க)

# திருமலை பிரடறிக் கோட்டை ‘ராஜசிங்கா கோட்டை’ ஆகிறது

## கலைகலாச்சாரமந்திரிநடவடிக்கை

கோட்டை, வெள்ளி

**திருகோணமலையிலுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பிரடறிக் கோட்டை இனிமேல் ‘ராஜசிங்கா கோட்டை’என அழைக்கப்படும்.**

கலை, கலாச்சார அமைச்சர் திரு. குலதிலகாவின் தீர்மானத்தைத்தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இக்கோட்டை முதன்முதலாக போர்த்துக்கீசரினால் அமைக்கப்பட்டு ஒல்லாந்தரினால் புனருத்தாரணம் செய்யப்பட்டு பிரிட்டிஷாரினால்மாற்றியமைக்கப்பட்டது.

இக்கோட்டை புதைபொருள் இலாகாவிற்கு ஒதுக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகிறது.

கரம்பன் மூதாட்டி கொலை

## தகவல் கொடுப்போருக்கு சன்மானம்!

யாழ்ப்பாணம், சனி

கரம்பன் மூதாட்டிகொலை சம்பந்தமாக தகவல்கள் கொடுப்போருக்கு பெரும் சன்மானம் வழங்குவதற்கு பொலிஸாரும் உறவினர்களும் முன்வந்துள்ளனர்.

பிரேத பரிசோதனைநடாத்திய டாக்டர் கழுத்து நெரிக்கப்பட்டதால் மூதாட்டி மரணமடைந்திருப்பதாக தெரிவித்துள்ளார்.

மூதாட்டி விட்டிலுள்ள இரும்புப் பெட்டியை திறப்பதற்கு முயற்சி நடந்திருப்பதாகவும், சாவி கிடைக்காததால், இரும்புப் பெட்டி திறக்கப்படவில்லையென்றும் பொலிஸார்கருதுகின்றனர் இரும்புப் பெட்டி சாவியை மூதாட்டியின் சப்பாத்துக்குள்ளிருந்து பொலிஸார் கண்டெடுத்தனர்.


பொலிஸார் இரும்புப் பெட்டியை திறந்து அதற்குள்ளிருந்து 20,000 ரூபா பெறுமதியான நகைகளை மூதாட்டியின் மகளிடம் நேற்று ஒப்படைத்தனர்.

அந்த ஊரில் உள்ளவரின் உதவியில்லாமல் இச்சம்பவம் நடைபெறவில்லையென பொலிஸார் நம்புகின்றனர்

## மாத்தறையில் ஆசிரிய கலாசாலை

கோட்டை, வெள்ளி

மாத்தறையில் புதிதாக நிறுவப்பட்டுள்ள ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை ஜனவரி 4-ம் தேதி திறந்துவைக்கப்படவிருக்கிறது.



# 5000 டி.ஆர்.பி.காரர் ஏப்ரலுக்கு முன் நாடுதிரும்பவேண்டும்

கோட்டை, வெள்ளி

சிறு தொழில்களில் ஈடுபட்டுள்ள 5000 டி. ஆர். பி. காரர்களை அடுத்தாண்டு ஏப்ரில் மாதத்துக்கு முன் [illegible] அந்தக் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது பாதுகாப்பு அமைச்சு இவ் விடயத்தில் மிகக் கண்டிப்பாக இருக்கவேண்டும்.

## தீர்மானம்

வேலணை, வெள்ளி

வேலணை கிழக்குப்பகுதி மக்களினதும் பாடசாலை

இந்தியாவின்

...பதற்கு முயற்சி நடத்திருப் பொலிஸார் நம்புகின்றனர்

இந்தியாவின்

# இடைக்கால தேர்தலுக்கு எதிர்க்கட்சிகள் எதிர்ப்பு

புதுடில்லி,டிச.25

இந்தியாவில் இப்போது இடைக்கால பொதுத்தேர்தல் நடாத்தப்படுவதற்கான யோசனைகளை பல எதிர்க்கட்சித்தலைவர்கள் ஆட்சேபித்திருக்கிறார்கள்.

பிரதமர் இந்திராகாந்தி சிறுபான்மைக் கட்சியின் தலைவராக இருக்கிறார் என்றும் லோகசபையைக்கலைக்க வேண்டுமென்று அவர் யோசனை தெரிவித்தால், அதனை ஜனாதிபதி ஏற்கக்கூடாதென்றும் ஜனசங்கத் தலைவர் வாச்பாய் கருத்து தெரிவித்திருக்கிறார்.

வாக்காளர் வயதை 21-ல் இருந்து 18 ஆகக் குறைக்க வேண்டுமென்றும், இந்தியா அணுகுண்டு தயாரிக்கவேண்டுமென்றும் அவர் யோசனை தெரிவித்தார்.

பிரதமர் சிறுபான்மைக் கட்சியின் தலைவரென்றும் லோக்சபையை கலைக்கும் யோசனை கூற அவருக்கு உரிமையில்லையென்றும் திரு கிருபலானி கூறியிருக்கிறார்.

லோகசபையைக்கலைக்கும்படி பிரதம மந்திரி யோசனை கூறினால் அதனை மறுத்து எதிர்க்கட்சிகள் மாற்று அரசாங்கம் ஒன்றினை அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று சம்யுக்த சோஷலிஷ்ட் கட்சிக் காரியதரிசி திரு ஜோர்ஜ் பெர்னாண்டஸ் ஜனாதிபதிக்கு கடதம் எழுதியிருக்கிறார். மாற்று அரசு அமைக்கும் விஷயமாக ஆலோசனைக்கூட்டம் ஒன்றினை நடத்தவேண்டுமென்றும் திரு. பெர்னாண்டஸ் எதிர்க்கட்சித்தலைவர்களுக்கு கடிதம் எழுதியிருக்கிறார்

## கருணாநிதி எதிர்ப்பு

லோகசபைக்கு இடைக்காலத் தேர்தல் நடத்துவதானால் நிர்வாக சிக்கல்கள் ஏற்படும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் திரு- மு. கருணாநிதி கூறினார். இடைக்கால தேர்தல் நடத்தவேண்டிய அளவுக்கு இந்திரா அரசு பலம் குறைந்திருப்பதாகத் தெரியவில்லையென்று அவர் கூறினார்.

லோக்சபைக்கு இடைக்கால தேர்தல் நடத்தப்படுமா இல்லையா என்பதுபற்றி இம்மாதம் 28-ந்திகதி இந்திரா அரசு முடிவு எடுக்கும் என்று கூறப்படுகின்றது

# ரூ. 76 கோடிக்கு ஏற்றுமதி

கோட்டை, வெள்ளி

இந்த ஆண்டில் சுமார் 76 கோடி ரூபா பெறுமதியான பொருட்களை இலங்கை ஏற்றுமதிசெய்திருக்கிறது

வழமையாக ஏற்றுமதி செய்யப்படும் தேயிலை, ரப்பர், தெங்குப்பொருட்களை விட இதர உள்நாட்டு உற்பத்திப்பொருட்களும் ஏராளமாக ஏற்றுமதியாகியுள்ளன,

கடந்த ஆண்டு இதேகாலத்தில் ஏற்றுமதியானபொருட்களைவிட 9கோடி 90 லட்சம் ரூபாய்பெறுமதியானபொருட்கள் அதிகமாக ஏற்றுமதியாகியுள்ளன.

## கருவாட்டுக்கு விலைக் கட்டுப்பாடு வருகிறது

மாவிட்புரம், வெள்ளி

''உள்ளூர்க் கருவாட்டுக்கு கட்டுப்பாடு விலை நிர்ணயிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக கூ. மொ. வி. ஸ்தாபன கருவாட்டுப் பிரிவுத் தலைவர் திரு. எ ஈ. பெரேரா தெரிவித்துள்ளார்,

அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த திரு, பெரோராவை மீன்பிடிக் கூட்டுறவுச் சங்கங்களின் தூதுக்குழு ஒன்று திரு. எஸ், லோறன்ஸ் தலைமையில் பேட்டிகண்டபோதே அவர் இவ்விதம் கூறினார் இத்தூதுக்குழு கருவாட்டு விலையின் பட்டியல் ஒன்றை தலைவரிடம் கையளித்தது கருவாட்டின் விலை நிதானமில்லாதிருப்பதால் மீனவர் நஷ்டமடைவதாகவும் வாழ்க்கைச் செலவு உயர உயர கருவாட்டுவிலையும் உயருகிறது என்று இக்குழு தெரிவித்தது

கருவாட்டை தனியார் வியாபாரிகளிடம் கொடுத்து நட்டமடையவேண்டாம் அரசாங்கம் கருவாட்டுக்கு கட்டுப்பட்டு விலையை அமுல் செய்யவிருக்கிறது என்று திரு பெரேரா தூதுக்குழுவிடம் கூறினார்.

மீனவர்கள் தமது தொழிலை நல்ல முறையில் நடத்த வள்ளங்கள் வாங்குவதற்கு அரசு 5000 ரூபா கடன் உதவி செய்ய வேண்டும் என்றும் அவரிடம் தூதுக்குழு கோரிக்கை விடுத்தது.


## ஆலோசனைக் கூட்டம்

அராலி, வெள்ளி

அராலிக் கிராமத்தில் வயல்களுக்கூடாக செல்லும் நீரோடி வாய்க்கால்கள், வண்டிப்பாதைகள், ஒப்பு நீர்த்தடை வரம்புகள் ஆகியவற்றை சிரமதான முறையில் மக்களால் அமைப்பது பற்றி ஆலோசிப்பதற்கு கமநலச்சேவை உதவிஆணையாளர் திரு கே சபாரத்தினம் விவசாயவிஸ்தரிப்பு அதிகாரி திரு மாணிக்கவாசகர் கமநலச்சேவை பெரும்பாக உத்தியோகத்தர் திரு சு சிவகுரு விவசாய இலாகா காரியாலய போதனாசிரியர் திரு க குலாரசாமி மற்றும் பல உத்தியோகத்தர்களும் கிராமமக்களும் சேர்ந்து அராலி தெற்கு கிழக்கு பயிர்ச் செய்கைக் குழு அலுவலகத்தில் புதன்கிழமையன்று ஓர் ஆலோசனைக் கூட்டம் நடத்தினர்'

கூட்டத்திற்கு திரு. ச. அப்பையா தலைமைவகித்தார்.

இக் கூட்டத்தில் இரு நீரோடி வாய்க்காலும் இரு வண்டிப் பாதைகளும் 1971-ம் ஆண்டில் சிரமதான முறையில் அமைத்துக் கொள்வதென ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.



இன்று மாலை வர்த்தக அமைச்சர் திரு. ரி. பி. இலங்கரத்தினவினால் திறந்து வைக்கப்படவிருக்கும் வலி. மேற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்க சமாஜ மின்தறி நெசவாலையின் செப்பனிடும் பகுதியின் முகப்புத்தோற்றம் இக்கட்டிடம் கொந்தருத்துக்கு கொடுக்காமல் சமாசத்தினால் கட்டப்பட்டதாகும்.

# இன்று வரும் அமைச்சர்களுக்கு யாழ். நகரில் அமோக வரவேற்பு

## நிகழ்ச்சிகளில் காங்கிரஸ் எம். பி.க்கள் கலந்துகொள்வர்

யாழ்ப்பாணம், சனி

ஐக்கிய முன்னணி அரசாங்கத்தை சேர்ந்த வெளிநாட்டு, உள்நாட்டு வர்த்தக அமைச்சர் திரு. ரி. பி இலங்கரத்தின, தபால், தந்தித் தொடர்பு அமைச்சர் திரு செ. குமாரசூரியர் ஆகியோர் இன்று காலை உத்தியோக பூர்வமாக வட பகுதிக்கு விஜயம் செய்கின்றார்கள்.



மெயில் வண்டியில் வரும் மந்திரி இலங்கரத்தினவிற்கு இன்றுகாலை 5 மணிக்கு யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்திலும் ,விமானத்தில்வரும், மந்திரிகுமாரசூரியருக்கு இன்று காலை 8 மணிக்கு பலாலி விமான நிலையத்திலும், மகத்தான வரவேற்பு அளிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இன்று காலை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற பெறவிருக்கும் கூட்டுறவு வருடாந்த மகாநாட்டில் இரு அமைச்சர்களும் கலந்து கொண்டு உரையாற்றுவார்கள், இன்று மாலை 4.15 மணிக்கு வலிகாமம் மேற்கு பலநோக்கு கூட்டுறவு சங்க சமாஜ மின்தறி நிலையத்தை வர்த்தக அமைச்சர் திரு ரி. பி இலங்கரத்ன திறந்து வைப்பார்.

தபால் மந்திரி திரு செ. குமாரசூரியர், காலஞ்சென்ற ஏ. ரி வேதாபரணத்தின் படத்தை திரை நீக்கம் செய்து வைப்பார் திருமதி தாமரைகுமாரி இலங்கரத்ன விளக்கேற்றி வைப்பார் பிற்பகல் 4.30 மணிக்கு தபால் மந்திரி திரு செ. குமாரசூரியர் தலைமையில் நடக்கும் பொதுக் கூட்டத்தில், மந்திரி இலங்கரத்தின, திருமதி தாமரைக்குமாரி இலங்கரத்தின எம். பி , வட்டுக்கோட்டை எம். பி திரு. ஏ தியாகராசா ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

மாலை 5மணிக்கு யாழ்ப்பாணம் பிரதான வீதியிலுள்ள சுதந்திர கட்சி கிளை காரியாலயத்தில், இரு அமைச்சர்களும் உறுப்பினர்களுடன் கலந்துரையாடுவார்கள்.

யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில், ஐக்கிய முன்னணி அரசாங்கத்தை ஆதரிக்கும் பொதுக் கூட்டம் மாலை



5.30 மணிக்கு ஆரம்பமாகும் வடபகுதி சுதந்திரக் கட்சி உபதலைவர் திரு. அல்பிரட் துரையப்பா தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில், வர்த்தக மந்திரி திரு ரி பி இலங்கரத்ன, தபால்மந்திரி திரு செ. குமாரசூரியர், கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபன தலைவர் திரு ஐ ஆர் ஏ அபயசேகரா, நியமன எம். பி திரு எம் சி சுப்பிரமணியம், திருவாளர்கள் ஏ வில்வநாதன் ,பி கதிரவேலு, பொ நாகலிங்கம், வ பொன்னம்பலம், கு விநோதன் ஆகியோர் உரைநிகழ்த்துவார்கள். தமிழ் காங்கிரஸ் ஆட்சி மன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டு உரை நிகழ்த்துவார்கள்.

மாலை 6 மணிக்கு, வீரசிங்கம் மண்டபத்தில் கலை நிகழ்ச்சிகளும், பரிசளிப்பு விழாவும், மந்திரி திரு ரி பி இலங்கரத்ன, திருமதி இலங்கரத்ன ஆகியோரின் ஆதரவில் நடைபெறும்' திருமதி இலங்கரத்தின பரிசில்களை வழங்குவார்.

கோட்டை, வெள்ளி

சிறு தொழில்களில் ஈடுபட்டுள்ள 5000 டி. ஆர். பி. காரர்களை அடுத்தாண்டு ஏப்பிரல் மாதத்துக்கு முன் நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்று பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா உத்தரவிட்டுள்ளார்.

5000 டி. ஆர். பி. காரர்களுக்கு பிரதமர் விசேஷ உத்தரவொன்றின் மூலம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பிரதமரின் உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இந்தக் காலவரையறையை அரசாங்கம் இனித் தளர்த்தப்போவதில்லை. டி. ஆர். பி. காரர்கள் தங்கள் கால எல்லையை நீடிக்குமாறு கோரினாலும் அந்தக் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

பாதுகாப்பு அமைச்சு இவ்விடயத்தில் மிகக் கண்டிப்பாக இருக்க வேண்டும். பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் கால நீடிப்புக் கோரி விண்ணப்பிப்பவர்களின் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளக்கூடாது. இவ்வித நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொள்ளாவிட்டால் இந்தியர் பிரச்னையை வருங்காலத்தில் தீர்ப்பது கஷ்டமாகவிருக்கும்.

பெரிய வர்த்தகங்களில் ஈடுபட்டுள்ள டி. ஆர் பி. காரர்களுக்கு அவர்கள் நாடு திரும்ப 6 மாத காலாமதம் கொடுப்பது குறித்து அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது.

## தீர்மானம்

வேலணை, வெள்ளி

வேலணை கிழக்குப்பகுதி மக்களினதும் பாடசாலை செல்லும் மாணவர்களினதும் போக்குவரத்து வசதியை ஏற்படுத்தும் பொருட்டு யாழ்ப்பாணமிருந்து மண்கும்பான் சாட்டி அம்மன் கோவிலடி வீதிகள் ஊடாக புங்குடுதீவுக்கும் ஊர்காவற்றுறைக்கும் பஸ் சேவை நடாத்துமாறு போக்குவரத்து அமைச்சர் திரு லெஸ்லி குணவர்த்தனவையும் இ. போ. ச, வடபிரதேச முகாமையாளரையும் கோருவதென வேலணையில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக் வேலணைக் கிளைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

## புகையிரத நிலையங்கள்

கண்டி, வெள்ளி

கண்டி, பலதல்வின, மீகம்மன்ன, வத்தவற, யற்றவரு ஆகிய இடங்களில் கண்டி சிரமதானக் கமிட்டி சிரமதானம் மூலம் புகையிரத நிலைய மேடைகளை அமைத்துள்ளது. இந்நான்கு புகையிரதநிலைய மேடைகளுள் கடைசியாகக் கட்டப்பட்ட யற்றவரு புகையிரதநிலைய மேடை கடந்த வாரம் தான் பூர்த்தியடைந்தது. இதன் பெறுமதி 10,000 ரூபா எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

## கரிக்கிடங்கு சேவை

கோட்டை, வெள்ளி

அடுத்த ஜனவரி 1-ம் திகதி தொடக்கம் இலங்கை பெற்றோலியம், கூட்டுஸ்தாபனம் ஷெல், கல்டெக்ஸ் எஸ்ஸோ ஆகியவற்றிடமிருந்து கப்பல் கரிக்கிடங்கு சேவைகளை தானே எடுத்து நடத்தவிருக்கிறது.

ஜனவரி 1 ம் திகதி இவ் வைபவத்தை பிரதமர் திருமதி பண்டாரநாயக்கா ஆரம்பித்து வைப்பார். இவ் வைபவம் கொழும்பு—கோட்டை வடக்கில் நடைபெறும்.

கப்பல் கரிக்கிடங்குகளை தன்வசமாக்கிக் கொள்வதன் மூலம் கூட்டுத்தாபனத்துக்கு அந்நிய செலாவணியில் 2கோடி ரூபா வருமானம் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது அத்துடன் வருடத்துக்கு படகுச் செலவு மற்றும் சேவைகளினால் 6கோடி ரூபா வருமானம் இடைக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது

## அமைச்சர் விஜயம்

யாழ்ப்பாணம், சனி

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் நடக்கும் குரும்பசிட்டி உதயதாரகை மன்ற உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டியில் பிரதம விருந்தினராக விளையாட்டுத்துறை அமைச்சர் திரு கே. பி. இரத்நாயக்கா கலந்து கொள்வார். இறுதிப் போட்டி தைப் பொங்கல் தினத்தன்று நடைபெறவிருக்கிறது.

.....

கிளிநொச்சி, வெள்ளி

யாழ். மாவட்டத்தில் கிணறுகளில் மீண்டும் நன்நீர் ஆராய்ச்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நன்னீர் உவர் நீராக மாறிவருகிறதா என்பதைப் பரிசோதிக்கும் வேலைகளை 1965-ம் ஆண்டு ஜூன் மாதத்தில் அரசாங்கம் ஆரம்பித்திருந்தது.

தற்போது கிராம சேவகர்கள் மூலம் சகல காரியாதிகாரிகள் பிரிவுகளிலும் உள்ள நீர் நிலைகளில் இருந்து நீர் சேகரித்துப் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுவருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்


மாடு, ஆடு முதலிய மிருகங்கள் விற்கலாம், வாங்கலாம். போயா முன்தினம், போயா விடுமுறை நாட்களில். ப. நாகராசா, ஆலாத்திவெளித் தோட்டம், அரசினர் உணவுப் பண்டகசாலைக்கு அண்மையில், நாவற்குளி. 2589

### விற்பனைக்கு

உங்களுக்கு காது கேட்கவில்லையா? காது கேட்க உதவும் கருவி (Hearing Aids) எம்மிடம் இப்பொழுது விற்பனையாகின்றது சீடில்ஸ் (யாழ்ப்பாணம்) லிமிட்டெட் 122, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம் 2604

யாழ்ப்பாணம் சிவன் கோவில் வடக்கு வீதியில் வீட்டுடன் கூடிய 4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. லான்ட் இன்வெஸ்ட்மென்ட்ஸ், 6, பிரதான வீதி, யாழ்ப்பாணம், தொலைபேசி: 7453. 2598

### தேவை

மெசின் பூவேலை, சிமாக்கிங் வேலைகள் செய்யக் கூடிய அனுபவம் வாய்ந்த பெண்கள் தேவை. மிஸ் இன்ஸ், 27, பெரியகடை, யாழ்ப்பாணம். 2607

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் அல்லது சுற்றுப்புறத்தில் மத்திய வகுப்பினர் வீட்டுத் திட்டத்திற்கு உகந்த தெரு ஓரமாகவுள்ள காணி தேவை. உடனே கொள்வனவு செய்யப்படும். விலை விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். லான்ட் இன்வெஸ்ட்மென்ட்ஸ், 6, பிரதான வீதி, யாழ்ப்பாணம், தொலைபேசி: 7453. 2599

5 வருடத்திற்குக் குறையாத அனுபவமும், வருமானவரிக் கந்தோருக்கு ஏற்றுக்கொள்ளும் வகையில் கணக்கு தமிழில் எழுதத் தெரிந்த கணக்கப்பிள்ளை ஒருவர் தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரில் வரவும். எஸ். சுப்பிரமணியம் அன் கோ 53, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 2436


## புதிய நிர்வாகிகள்

சுழிபுரம், வெள்ளி

வட்டுக்கிழக்கு - சித்தன்கேணி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க இருபத்திரண்டாவது வருடாந்தப் பொதுக் கூட்டம் சித்தன்கேணி கணேசவித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்றது. புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: இ மு அருணாசலம், உபதலைவர்: க சநிற்சிங்கம், காரியதரிசி: என் எஸ் கந்தசாமி.

0 0 0

யாழ்ப்பாணம், வெள்ளி

அண்மையில் நடைபெற்ற அகில இலங்கை சர்வகலை தொழில் நிறுவனக் கூட்டத்தில் பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

இசை போஷகர்: திரு கே வேலாயுதம், தலைவர்: திரு ரி இராமலிங்கம், உபதலைவர்: திரு எம் என் செல்லத்துரை, செயலாளர்கள்: திருவாளர்கள்: பி சந்திரசேகரம், கேகேவிசெல்லையா, கணதிகாரி: திரு கே இரத்தினகோபால், அமைப்பாளர்: திரு குஞ்சு பத்மநாதன், கணக்காளர்: திரு ஆர்தட்சணாமூர்த்தி பத்துப் பேர் கொண்ட நிர்வாக சபையும் அமைக்கப்பட்டது.

......

## புதிய மாஜிஸ்டிரேட்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் ஜே எவ். ஏ. டயஸ் காலி மேலதிக மாவட்ட நீதிபதியாக ஜனவரி 1-ந் திகதி முதல் மாற்றலாகிச் செல்கின்றார். கொழும்பு தெற்கு நீதவான் திரு கொல்வின் மென்டிஸ் யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட்டாக இடமாற்றம் செய்யப்பட்டிருக்கிறார்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

சனி 26—12—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அல்ல் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 கத்தோலிக்கநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 குரல்வகை, 7-45 திரைகானம், 8-00 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்,

# ஓய்வு பெறும் ஆசிரியர்கள்

### அதிபர் ஜே. ஐ. தம்பிஐயா

யாழ்ப்பாணம், வியாழன்

ஆவரங்கால் மெதடிஸ்த மிஷன் பாடசாலை அதிபர் திரு ஜே. ஐ தம்பிஐயா தமது 39 ஆண்டு ஆசிரிய சேவையினின்றும் இம் மாதம் 20-ம் திகதியுடன் ஓய்வு பெற்றார். திரு, தம்பியையாவுக்கு விரிவானமுறையில் பிரிவுபசாரம் நடத்துமுகமாக ஆலோசிப்பதற்கு மாணவர்களும் ஆசிரியர்களும் மற்றும் பெற்றோர் பழையமாணவர்களும் திரு வெ. கணபதிப்பிள்ளை தலைமையில் கூடி ஆலோசித்தனர்.

### சங். சகோதரி சபீனா

பருத்தித்துறை, வியாழன்

"உலகின் பல பாகங்களிலும் கல்வி அறிவைப்பரப்பி அறத்தை வளர்த்த கத்தோலிக்க துறவிகளின் பணி தொடர்ந்து கிடைக்குமோ என்பது சந்தேகம் இலங்கையின் பல பகுதிகளிலும் சிறந்த கல்வி நிலையங்களை நிறுவிப் பணியாற்றிய அவர்களுக்கு எமது சமுதாயம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது"

இவ்வாறு நேற்றுமுன் தினம் வதிரி றோமன்கத்தோலிக்க பாடசாலைத் தலைமையாசிரியையாகக் கடமையாற்றி ஓய்வுபெறும் சங். சகோதரி எம். சபீனாவின் பாராட்டுவிழாவில் உரை நிகழ்த்திய ஆசிரியர் திரு. எஸ் அந்தோனிமுத்து கூறினார். கட்டளைக்குரவர் வண. எஸ். வில்லவரசிங்கம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் வேறு பலர் பாராட்டுரை வழங்கினர்.

0 0 0

தாவடி வெள்ளி

கொக்குவில் இந்துக் கல்லூரிக்கனிஷ்ட பாடசாலைத் தலைமை ஆசிரியர் திரு. மா. ஆனந்தர், சிரேஷ்ட பாடசாலை ஆசிரியர் திரு வி. சி இராமநாதன் ஆகியோர் ஓய்வு பெறுகின்றனர்.

0 0 0

சுழிபுரம் வெள்ளி

சுழிபுரம் ஐக்கிய சங்க வித்தியாசாலை தலைமையாசிரியராக கடமையாற்றி வந்த பிரம்மஸ்ரீ சு, சண்முகரத்தின சர்மா தமது ஐம்பத்தைந்தாவது வயதில் ஓய்வு பெறுகின்றார்.

## கட்டிடப் பொருட்களுக்கு கட்டுப்பாட்டு விலை

கோட்டை, வியாழன்

"அடுத்த ஆண்டு மார்ச் மாதத்துக்கிடையில் வீடு கட்டுவதற்கு வேண்டிய கட்டிடப் பொருட்கள் கட்டுப்பாட்டு விலைக்குட்படுத்தப்படும்" என்று வடமைப்பு அமைச்சர் திரு, பீட்டர் கெனமன் தெரிவித்துள்ளார்

வீடுகட்டுவதற்குத் தேவையான சீமேந்து, இரும்புச் சாமான்கள், இணைப்பு பூட்டுகள், தீராந்திகள் மற்றும் தேவையான பொருட்கள் யாவையும் ... களை ... ஆராய்ந்து வீடமைப்பு

## இன்றைய பலன்

மார்கழி மாதம் 11-ம் திகதி [26-12-70]

மேஷம்- மனதில் அமைதி குன்றும், எதிரிகள் எக்காளமிடுவர், மறைந்த நினைவுகள் மீண்டும் தலைதூக்கும்.

ரிஷபம்- குழுமையான சம்பவங்கள் இடம்பெறும். வாழ்க்கையில் பசுமை தோன்றும். களஸ்திரவழி இலாபமுண்டு.

மிதுனம்- முன்னேற்றத்தில் தடை ஏற்படும். சிறுபிணி வாட்டும் ஆதரவு தருபவர்களுடன் பகைத்துக்கொள்ளவேண்டாம்.

கடகம்- நீண்ட நாள் கனவு இன்று நனவாகும். பெரியவர்கள் உதவிக்கு வருவர். புண்ணிய விருப்பு மேலிடும்.

சிம்மம்- உத்தியோகத்தில் உயர்வுடன் உரிமையும் கிடைக்கும். உற்சாகமாக கடமையாற்றுவீர்கள்.

கன்னி- எதிர்பார்த்த பண வரவுக்கு இடமுண்டு. பூமியால் லாபம் கிடைக்கும். புத்திரவழியால் நன்மையுண்டு.

துலாம்- பொருள்முடை தென்படும் கடன்பட நேரிடும். கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற முடியாது போக...

விருட்சிகம்- அவசர புத்தியினால் விபரீதங்கள் விளையலாம். கோபத்தை அடக்கினால் நிலைமை சீர்படும்

தனுசு- போதுமென்ற மனமும் புண்ணிய விருப்பு...

## பனைத் தீக்குச்சி யோசனை: உதவி மந்திரி பாராட்டு

உடுப்பிட்டி வெள்ளி

"தீப்பெட்டிக்கான குச்சிகளைத் தயாரிப்பதற்குரிய மரங்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யத்தேவையில்லை எமது நாட்டிலுள்ள பனைமரத்திலிருந்தே தீக்குச்சிக்கான எமது தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்ள முடியும். பனைமரத்திலிருந்து எதுவித பிரயோசனமுமில்லாது வீசப்படும் சிராம்பை நாம் தீக்குச்சிக்காகப்பயன் படுத்தலாம். இச்சிராய் இலோசாகத் தீப்பற்றுவதுடன் நீண்ட நேரம்எரிந்துகொண்டுமிருக்கும்"

இந்தயோசனையை அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபை நிர்வாகக் காரியதரிசி திரு. சி. செல்லையா வடபகுதிக்கு விஜயம் செய்த தோட்டக்கைத்தொழில் உதவி அமைச்சர் திரு. அல்பேர்ட்காரியவாசத்திடம் சமர்ப்பித்துள்ளார்.

திரு. செல்லையாவின் இந்த யோசனையைப் பாராட்டிய உதவியமைச்சர் பொருளாதார ரீதியில் பயன்தரக் கூடிய இத்திட்டம் நவீன முறையிலான தொழிலாக்கத்துக்கு வழிகாட்டுமென்று நம்பிக்கை தெரிவித்தார். பனம்பொருள் கூட்டுத்தாபனம் நிறுவப்படும் போது பனைமரத்திலிருந்து தீக்குச்சிகள் தயாரிப்பது சம்பந்தமான இத்திட்டம் பற்றிப் பரிசீலனைசெய்யப் படுமென்றும் உதவியமைச்சர் தெரிவித்தார்.

## 'உள்ளூர் ரயில்-பஸ் இணைப்புச்சேவை வேண்டும்'

கிளிநொச்சி, வெள்ளி

உள்ளூர் புகையிரத பஸ் இணைப்புச் சேவைகளை ஆரம்பிக்க வேண்டும். என்றும் பஸ் நிலையங்களில் நேர அட்டவணை இருத்தல் அவசியம் என்றும் உடுப்பிட்டி எம். பி. திரு ஜயக்கொடி கேட்டுக் கொண்டுள்ளார். யாழ் மாவட்ட பஸ் சேவைகளில் செய்யவேண்டிய திருத்தங்கள் சம்பந்தமாக இ. போ. ச. அதிகாரிகள் வடபகுதி ஆட்சி மன்ற உறுப்பினர்களைச் சமீபத்தில் சந்தித்து அவர்களது அபிப்பிராயங்களைக் கேட்டறிந்தனர். உடுப்பிட்டி ஆட்சிமன்ற உறுப்பினரிடம் இவ்வதிகாரிகள் அபிப்பிராயம் கேட்டபோது அவர்மேற்கண்டவாறுகுறிப்பிட்டார்.

பருத்தித்துறையில் இருந்து கிளிநொச்சி ஊடாக துணுக்காய்வரைபஸ்சேவை வேண்டுமெனவும், சகல பஸ் தரிப்பு நிலையங்களிலும் பஸ் வண்டிகள் தரித்துச் செல்ல வேண்டும் எனவும் அவர் அபிப்பிராயம் தெரிவித்துள்ளார்.

# 'பிறப்பால் மக்கள் யாவரும் சமமே'

கொழும்பு, வெள்ளி

"கடவுள் படைப்பில் எல்லாமக்களும் ஒரே அந்தஸ்து உடையவர்கள். ஆனால் அதிகார மமதையும் சுயநலப் பேராசையும் கொண்டவர்கள் மக்கள்மத்தியில் சாதித் துவேஷத்தையும், மதப் பிளவுகளையும், மொழிவேற்றுமைகளையும் பரப்பிவருகிறார்கள். இந்த சமுதாய பீடைகளுக்கெல்லாம் எதிரானது எமது இலங்கை ஹரிஜன யூனியன்"

இலங்கை ஹரிஜன யூனியன் விசேஷபொதுக்கூட்டம் மாதம்பை நகர சபைத் தொழிலாளர் விடுதியில் ...

### சூரன் போர்

வல்வெட்டித்துறை, வெள்ளி

வல்வெட்டித்துறை நெடியகாடு திருச்சிற்றப் பலப்பிள்ளையார் கோவிலில் சகஜமூகசூரன்போர் அடுத்த மாதம் முதலாந்திகதி நடைபெறவிருக்கின்றது.

### புதிய வித்தியாதிபதி

யாழ்ப்பாணம், சனி

வடபிரதேசக்கல்வியதிபதியாக, ஜனவரி 1-ம் தேதி முதல், திரு. எஸ். மகாலிங்கம் நியமிக்கப்படவிருப்...

## பிரதமருக்கு பாப்பரசர் நன்றி

கோட்டை, வெள்ளி

பிரதமர் திருமதி பண்டாரநாயக்காவுக்கு தனது இலங்கை விஜயத்தின்போது தனக்களிக்கப்பட்ட அமோக வரவேற்புக்கு பரிசுத்த பாப்பரசர் ஆறுவது சின்னப்பர் நன்றி தெரிவித்துள்ளார்.

இலங்கை மக்கள் எனக்கு அளித்த வரவேற்புக்கும் காட்டிய அன்புக்கும் நான் நன்றி செலுத்துகிறேன். அத்துடன் இலங்கைவாழ் மக்கள் அமைதியுடனும் மகிழ்ச்சியோடும் வாழ நான் பிரார்த்திக்கிறேன், ஆசீர்வதிக்கிறேன் எனப் பாப்பரசர் மேலும் தனது நன்றியறிவித்தலில் குறிப்பிட்டுள்ளார்.

## நடமாடும் ஆஸ்பத்திரிகள்

ருவான்வெல, வெள்ளி

அரசாங்க ஆஸ்பத்திரிகளுக்குச் சென்று சிகிச்சை பெற முடியாத நோயாளிகளின் நலனை முன்னிட்டு நடமாடும் ஆஸ்பத்திரிகளை நாட்டின் சகல பகுதிகளிலும் பணிபுரியச் செய்ய நடவடிக்கைகள் எடுத்துள்ளதாக சுகாதார அமைச்சர் திரு. பி. ஜி ஆரியதாசா தெரிவித்துள்ளார்.

ருவான்வெலப் பகுதியில் நிறுவப்பட்டுள்ள மத்திய மருந்துச்சாலையைத் திறந்து வைத்துப் பேசுகையில் அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். நிதி அமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா தலைமையில் வைபவம் நடைபெற்றது.

— —

## கட்டுப்பாடு

கோட்டை, வெள்ளி

போதை வஸ்துக்களை கட்டுப்படுத்தும் மத்திய நிறுவனம் ஒன்று கொழும்பில் நிறுவப்படவிருக்கிறது இத்தகவலை செய்திநிருபர்கள் மகாநாட்டில் பொலிஸ் மாஅதிபர் திரு. ஸ்டான்லி சேனநாயக்கா தெரிவித்தார்

இந்நிறுவனத்தில் சுகாதார இலாகா. கலால் இலாகா, சுங்க இலாகா, பொலிஸ் இலாகா ஆகியவை அங்கம் வகிக்கும்.

கஞ்சாச் செடி பயிர் செய்கையை ஒழிக்கும்விதத்தில் சக்திவாய்ந்த இரசாயனத் திராவகத்தைப்பயன்படுத்த இந்நிறுவனம் விவசாயத்திணைக்களத்தின் உதவி கோருமென்று தெரிவிக்கப்பட்டது.

......

## புதிய பகுதிகள்


ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்
எம்.ஜி.ஆர்—லட்சுமி ஜெயலலிதா —அசோகன் நடித்த
மாட்டுக்கார வேலன்

மனோஹரா — யாழ்ப்பாணம
தினசரி 3 காட்சிகள் போயா 4 காட்சிகள்
என். டி. ராமராவ், கே. ஆர். விஜயா, ராஜஸ்ரீ நடித்த
லக்ஷ்மி கடாட்ஷம்

ராஜா - யாழ். நகர்
தினசரி காலை 10, பிற்பகல் 2, மாலை 6, இரவு 9-30
ஏசுநாதர்-தமிழ்
இப்படத்துடன்
அறிஞர் அண்ணாவின் இறுதியாத்திரை
எல்லா காட்சிகளிலும் காண்பிக்கப்படும்
அத்துடன்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

அறிஞர் அண்ணாவின்
இறுதியாத்திரை
எல்லா காட்சிகளிலும் காண்பிக்கப்படும்
அத்துடன்
பாப்பரசரின் இலங்கை விஜயம் தமிழில்
40 நிமிடங்கள் வரை காண்பிக்கப்படும்.

யாழ். வின்ஸர் திரையில் தினசரி 4 காட்சிகள்
ராஜன், லட்சுமி,
நிர்மலா, ரவிச்சந்திரன்
நடித்த
ஏன்?
அத்துடன்
பரிசுத்த பாப்பரசர்
6-வது சின்னப்பரின்
இலங்கை விஜயம்
30 நிமடங்களுக்கு தமிழில் எல்லாக் காட்சிகளிலும் காண்பிக்கப்படுகின்றது

கெப்பிட்டல் பிளாஸா
திரைகளிலும்
யாழ். வெலிங்டன்
திரையிலும்
தினசரி பி.ப. 2-30, மாலை 6-30
இரவு 9-30, போயா நாட்கள்
காலை 10-30 மணி
ப. நீலகண்டனின் டைரக்ஷனில் உருவாகி
மக்கள் திலகம்
எம். ஜி. ஆர்.
ஜெயலலிதா
வாணிஸ்ரீ


முத்துராமன், அசோகன், சோ,
ஓ. ஏ. கே. தேவர் மற்றும்பலர் நடித்த
சத்யா மூவிஸ்
கண்ணன் என் காதலன்
அத்துடன்
வெலிங்டனில் பரிசுத்த பாப்பரசரின்
இலங்கை விஜயம் தமிழில் காண்பிக்கப்படும்


6-25 சைவ நற்சிந்தனை, 6-30 கத்தோலிக்க நற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 குரல்வகை, 7-45 திரைகானம், 8-00 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

844 மீ. அன்டு 49 மீ.

பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்ப இசை.

844 மீ. அன்டு 61 மீ.

மாலை 4-25 சங்கமம், 5-00 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-30 மாணவர்மன்றம்.

இரவு 6-15 இசைப்பயிற்சி, 6-30 வீட்டுவைத்தியம், 7-00 நாட்டுப்பாடல்கள், 7-30 பாட்டு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 நாடகம், 10-00 நேயர் விருப்பம், 10-30 செய்தித்தொகுப்பு.

## அக்கரைப்பற்று கி. ச. தீர்மானம்

சாய்ந்தமருது, வியாழன்

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த அக்கரைப்பற்று மத்திய கிராமசபையின் மாதாந்தக்கூட்டம், தலைவர் ஜனாப் ஏ ஆர். எம். இப்ராகீம் தலைமையில் நடைபெற்றது.

அடிக்கடி ஏற்படும் மின்சாரத்தடையை நீக்குவதற்கு மின்சார நிலையத்தை விஸ்தரிப்பதெனவும் மேலும் ஒரு மின்சக்தி நிலையம் நிறுவ நடவடிக்கை எடுப்பதெனவும் முடிவுசெய்யப்பட்டது.


வெஸ்லிசினிமா
மாவிட்டபுரம்
தினசரி 2-30, 6-30, 9-30
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா
நடித்த
நம் நாடு

ஸ்ரீகாலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 9-30
போயா நாட்கள் 2-30
கே. பி. சுந்தராம்பாள்
நடித்த
ஔவையார்

REGAL
Jaffna
Daily 4-45, 7, 9-45 p. m.
Poya days 4 shows
James Coburn
in
007 IN
LIKE FLINT


...ான சீமெந்து, இரும்புச் சாமான்கள், இணைப்பு பூட்டுகள், திராந்திகள் மற்றும் தேவையான பொருட்கள் யாவையும் பற்றிய விபரங்களை வீடமைப்பு கமிட்டி ஆராய்ந்து வீடமைப்பு அமைச்சரிடம் சிபார்சு செய்துள்ளது.

இதைத் தொடர்ந்து அமைச்சு வீடுகட்டுபவர்கள் தேவையான கட்டிடப் பொருட்களை சிறு கைத்தொழில் இலாகா, உருக்கு கூட்டுத்தாபனம், ஓட்டுப் பலகை கூட்டுத்தாபனம் ஆகியவற்றிடமிருந்து சுலபமாகப் பெற்றுக்கொள்ளக் கூடிய ஒழுங்குமுறைகளை வகுத்து வருகிறது.

## இருபிரிவுகளில் வல்வைவெற்றி

மாவிட்டபுரம் வெள்ளி

குரும்பசிட்டி உதயதாரகை விளையாட்டுக்கழக ஆதரவில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரிமைதானத்தில் நடைபெறும் உதைபந்தாட்டசுற்றுப் போட்டி 1-ம் பிரிவில் புன்னாலைக்கட்டுவன் கணேசாவிளையாட்டுக்கழகத்துக்கும் வல்வெட்டித்துறை விளையாட்டுக்கழகத்துக்கும் நடைபெற்றபோட்டியில் வல்வெட்டித்துறை கோஷ்டி 1-0 கோல்களால் வெற்றியீட்டியது.

2-ம் பிரிவில் வல்வைவிளையாட்டுக் கழகத்துக்கும் மயிலிட்டி தெற்கு ஞானோதயாக் கழகத்துக்கு நடைபெற்றபோட்டியில் வல்வை விளையாட்டுக்கழகம் 2-0 கோல்களால் வெற்றிபெற்றது.

## ஜேப்படிக்காரர் மீது நடவடிக்கை

மீதோட்டமுல்லை, வெள்ளி

இலங்கைப் போக்கு வரத்துச் சபையில் பஸ் ஒழுங்கு விதிகளுக்கு மாறாக பஸ்களில் பிரயாணம் செய்யும் கர்டையர்மீதும், பஸ்களில் வெளியூர் பிரயாணிகளிடம் இருந்து ஜேப்படி செய்யும் ஆசாமிகள் மீது பொலிசாரை தீவிர நடவடிக்கை எடுக்கக் கோரும் தீர்மானத்தை மீதோட்டமுல்லை இ.போ.ச தொழிலாளர் பிரதிநிதிகள் சபை நிறைவேற்றியுள்ளது.

அரசாங்கம் பஸ் போக்குவரத்தைச் சீர்திருத்த புதிய பஸ் சேவைகளை பிரயாணிகளுக்கு அளித்தபோதும் ஜேப்படிக்காரர்களிடம் இருந்து அவர்களைக் காப்பாற்ற நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் தொழிலாளர் பிரதிநிதிகள் சபையில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

(வி. நி.)

முடியாது போகலாம்.

விருட்சிகம்- அவசர புத்தியினால் விபரீதங்கள் விளையலாம். கோபத்தை அடக்கின் நிலைமை சீர்படும்.

தனுசு- போதுமென்ற மனமும் புண்ணிய விருப்பும் தலைதூக்கும். பொருள் வரவு திருப்திகரமாக இருக்கும். நல்ல தினம்.

மகரம்- இருள் மண்டிக்கிடக்கும். இன்று ஏமாற்றம் தாக்கும், குடும்பத்தில் உடல்நலம் பாதிக்கப்படலாம்.

கும்பம்- தகுதியில் முன்னேற்றமுண்டு. தரமான வாழ்வும் கிட்டும். எதிரிகள் பணிவர். எதிலும் வெற்றியுண்டு.

மீனம்- நல்ல காரியங்களை ஆரம்பிப்பதற்கு இன்று பொன்னான நாள். தொழில் புரியும் இடத்தில் பாராட்டுதல்கள் கிடைக்கும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை
[illegible]
ஆசிரியர்

## 70 வயதில் ஓய்வுபெறும் காலம்வரும்

கம்புறுப்பிட்டியா, வெள்ளி

"இலங்கை இன்னமும் சோஷலிஸத்தை முற்றாகப் பெறவில்லை மிகவிரைவில் முழுசோஷலிஸ நாடாக மாறும் அப்போது ஆசிரியர்களின் சேவைக்காலத்தை எழுபது வயதுவரை நீடிக்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளும்"

இவ்வாறு கம்புறுப்பிட்டியா மாபலன வித்தியாலயத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உதவிகல்வி அமைச்சர் திரு. பி. வை. துடாவே பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது: சோஷலிஸ நாடான போலந்தில், அரசாங்க ஊழியர்கள் 72 வயதில் ஓய்வு பெறுகிறார்கள், தற்போதிருக்கும் முறையை அரசாங்கம் மிகவிரைவில் மாற்றும் என எதிர்பார்க்கிறோம்

......

## கிறிஸ்மஸ் பார்சல் வழங்கினர்

சுழிபுரம், வெள்ளி

தொல்புரம் அரசினர் வைத்தியசாலையில் மருந்து பெற்றுவரும் கயரோக நோயாளர்களுக்கு நவாலியைச் சேர்ந்த வை. எம். சி ஏ யினர் தின்பண்டங்கள், துவாய்கள் முதலியன அடங்கிய கிறிஸ்மஸ் பார்சல் வழங்கினர்.

ரானது எமது இலங்கை ஹரிஜன யூனியன்"

இலங்கை ஹரிஜன யூனியன் விசேஷபொதுக்கூட்டம் மாதம்பை நகர சபைத் தொழிலாளர் விடுதியில் நடைபெற்றபோது யூனியன் உபதலைவர் திரு. பி. பி பாலசிங்கம் தலைமையுரையில் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. அன்ரனி இக்னேசியஸ் கூறியதாவது: 1940ல் தொழிலாளர் போராட்டத்தில் உயிர்நீத்த வீரர் கந்தசாமியின் மறைவை அடுத்து ஈழத்துத் தொழிலாளர் மத்தியில் ஒருபுதிய விழிப்பும் தியாக சிந்தையில் ஒருபுதிய சகாப்தமும் உருவாகியுள்ளது. தொழிற்சங்க ரீதியில் பெரும் சாதனைகள் இடம்பெற்றபோதிலும் சுயநலத்தலைவர்களினால் பிழையான பாதையில் வழிநடத்திச்செல்லப்பட்டு, இந்நாள் வரையும், தொழிலாளர் உரிமைகளை இழந்துவருகிறார்கள் இழந்த உரிமைகளைப் பெற முயலவேண்டும்.

யூனியன் உபசெயலாளர் திரு. எம். விக்டர் ஜோசப் பேசுகையில், அறிவுப்புரட்சி ஏற்பட்டால்தான் தொழில் புரட்சியும், பொருளாதாரப் புரட்சியும் ஏற்படுமென்றும். மக்களின் கல்வித்தரங்கள் உயர்ந்தாலே மற்றத் தரங்களும் உயருமென்றும் ஆதலால் வாழ்க்கையில் வளம்பெற கல்வியில் முன்னேற வேண்டுமென்றும் சொன்னார்.

திருவாளர்கள் ஜி: மத்தியூஸ், காசிகாளி, எம் மூர்த்தி எஸ். வரன், கே. குப்புசாமி உட்பட மற்றும் பலர் பேசினார்கள்.

— —

## சுகாதார பரிசோதகர்கள் இடமாற்றம்

கிளிநொச்சி, வெள்ளி

கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடமையாற்றிய பொது சுகாதாரப் பரிசோதகர்கள் ஐவர் புத்தாண்டு முதல் இடமாற்றம் பெற்றுச்செல்கின்றனர்.

திரு. ஆர். சோமசுந்தரம் எலியகொடைக்கு மாற்றப்பட்டுள்ளார். திரு. கே. தங்கராசா செம்பியன்பற்றிலிருந்து கிளிவெட்டிக்கும், திரு. என். வேலாயுதம் பளையிலிருந்து எட்டியாந்தோட்டைக்கும் திரு. எஸ். புவனேந்திரன் கிளிநொச்சியில் இருந்து சித்தாண்டிக்கும் 1971 ம் ஆண்டு தை மாதம் முதல் இடமாற்றம் பெற்றுச்செல்கின்றனர்.

## வித்தியாதிபதி

யாழ்ப்பாணம், சனி

வடபிரதேசக்கல்வியதிபதியாக, ஜனவரி 1-ம் தேதி முதல், திரு. எஸ். மகேந்திரலிங்க நியமிக்கப்படவிருப்பதாக தெரியவருகிறது. இவர் தற்பொழுது பல்கலைக்கழக செயலாளராக கடமையாற்றிவருகிறார்.

தற்பொழுது வடபிரதேச கல்வி வித்தியாதிபதியாகக் கடமையாற்றும் திரு. வி சங்கரலிங்கம் தென்பகுதிக்கு இடமாற்றம் செய்யப்படவிருப்பதாகவும் தெரியவருகிறது. (கு: வி. ம.)

சாயத்திணைக்களத்தின் உதவி கோருமென்று தெரிவிக்கப்பட்டது.

......

## புதிய பகுதிகள்

கோட்டை, வெள்ளி

அரசாங்க நிர்வாகங்களைக் கவனிக்க கிராமசேவைப் பகுதிகளையும். காரியாதிகாரிப் பிரிவுகளையும் விஸ்தரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. நெருக்கமான பகுதிகளில் 220 புதிய கிராம சேவைப்பகுதிகளையும் 15 காரியாதிகாரிப் பகுதிகளையும் நிறுவ அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

## மரண அறிவித்தல்

— ஏ. வி. கந்தையா —

கரணவாய்தெற்கைச் சேர்ந்த மலாயன் பென்சனர் A V. கந்தையா காலமாகிவிட்டார்கள் இவர் காலஞ்சென்ற சின்னத்தங்கத்தின் கணவரும், நெல்லியடி மத்திய மகாவித்தியாலய ஆசிரியர் குலசேகரம், செல்லம்மா, நீர்கொழும்பு பெரியமூலை முஸ்லிம்மகாவித்தியாலய ஆசிரியர் வல்லிபுரநாதன், கொழும்பு முருகேசு அன் குலரத்தினவைச் சேர்ந்த வழக்கறிஞர் நீலகண்டன், இராமநாதன் கல்லூரி மாணவி கமலாம்பிகை ஆகியோரின் தந்தையும் ஆயிலியம், இளைப்பாறிய கொழும்பு முனிசிபாலிட்டிப் பரிசோதகர் செல்லையா, வள்ளியம்மை ஆகியோரின் சகோதரரும் தவமணி, ஸ்ரேலிங் புரொடக்ஸ் லிமிடெட்டைச் சேர்ந்த பாலசுந்தரம் ஆகியோரின் மாமனருமாவார். தகனக்கிரியைகள் இன்று (26-12-70) காலை கரணவாய் தெற்கில் நடைபெறும். 2170


★ உறுதியானதும்
★ நீடித்து உழைப்பதும்
★ தன்னிகரற்றதுமான
"வைத்திலிங்கம்ஸ்"
இரும்பு - பித்தளை - மரஸ்குறு
ஆணிகளை
நீங்கள் வாங்குவதனால்
ஒரு சிறந்த பொருளைவாங்குவதோடு
உள்நாட்டு உற்பத்தியையும் வளர்க்கின்றீர்கள்
என்பதை மறவாதீர்கள்.
தயாரிப்பாளர்:
என். வைத்திலிங்கம் நிறுவனத்தார்
இரும்பு வியாபாரிகள்
450, பழைய சோனக தெரு, கொழும்பு-2
தொலைபேசி: 33143—4.
கிளை: 38, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 530


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவில் விரைவில் இடைக்காலத்தேர்தல்

புதுடில்லி, டிச. 25

இந்தியாவில் விரைவில் இடைக்காலப் பொதுத்தேர்தல் நடைபெறக்கூடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு ஜெகஜீவன்ராம் தலைமையிலுள்ள புதிய காங்கிரஸ் கட்சியின் காரியக் கமிட்டிக் கூட்டத்தில் இடைக்காலத் தேர்தல்பற்றி ஆராயப்பட்டு ஒரு முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிகிறது. இக் கூட்டத்தில் பிரதமர் திருமதி இந்திராகாந்தி கலந்து கொண்டார். ஆனால் அவர் கூட்டத்தில் எதுவும் பேசவில்லை என்று திரு ஜெகஜீவன்ராம் தெரிவித்தார்.

இடைக்காலத் தேர்தல் எப்போது நடைபெறும் என்று நிருபர்கள் திரு ஜெகஜீவன்ராமிடம் கேட்ட போது வரவுசெலவுத் திட்டத்தின் பின்னரா தேர்தல் நடைபெறும் என்று பதில் கேள்வியாகவே அவர் பதிலளித்தார்.

காங்கிரஸ் காரியக்கமிட்டிக் கூட்டத்தில் இடைக்காலத் தேர்தல் நடந்தால் காங்கிரசுக்கு வாய்ப்பு எப்படியிருக்குமென்பது பற்றி ராஜ்ய வாரியாக ஆராயப்பட்டதாகத் தெரிகிறது.

இடைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு அதிகவெற்றி வாய்ப்பு இருப்பதாக திரு ஜெகஜீவன்ராம் நிருபர்களிடம் கூறினர்.

லோக்சபையைக் கலைத்து இடைத்தேர்தல் நடத்துவதற்கு ஆட்சிமன்றத்தில் சிறுபான்மையினராக இருக்கும் ஒரு கட்சிக்கு அதிகாரம் இல்லையென்று பழைய காங்கிரஸ் ஆட்சிமன்றக் குழுத் தலைவர் டாக்டர் ராம் சுபாக் சிங் தெரிவித்தார்.

லோக்சபையைக் கலைத்து இடைத்தேர்தல் ஒன்று நடத்துவதற்கு அரசியல் திட்ட நெருக்கடி எதுவும் இப்போது இல்லை என்று மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு ஏ. கே. கோபாலன் தெரிவித்தார்.

இந்தியாவின் அடுத்த பொதுத்தேர்தல் 1972-ம் ஆண்டில் நடைபெறவேண்டும். ராஜமான்ய ஒழிப்புக்கட்டளையை ரத்துச்செய்து சுப்ரீம்கோர்ட் தீர்ப்பளித்ததால் இடைக்காலத் தேர்தல் நடைபெறும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

# போலந்து வெளிக் கொள்கை மாறாது

வார்சோ, டிச. 25

போலந்தில் புதிதாகப் பதவிக்கு வந்துள்ள அரசாங்கம் மிகவிரைவிலேயே தொழிலாளர்களின் பிரச்னைகளைத்தீர்த்து சுபீட்சம் ஏற்படுத்தப்போவதாக அறிவித்துள்ளது.

சோமுல்காவின் பொருளாதாரக் கொள்கைளில் மாற்றங்கள் செய்யப்பட்டபோதிலும் பழைய வெளிநாட்டுக் கொள்கையில் மாற்றம் ஏற்படாது என்று அறிவிக்கப் பட்டுள்ளது. மேற்குஜெர்மனியுடன் உறவுகளைப்பலப்படுத்திக்கொள்ளவும், மேற்குநாடுகளுடன் பொருளாதார ஒப்பந்தங்கள் செய்து கொள்ளவும் முயற்சி எடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# எம். எஸ். சுப்புலட்சுமிக்கு 'இசைப் பேரறிஞர்' பட்டம்

## தமிழிசைச் சங்கம் வழங்கியது

சென்னை, டிச 25

பாடகர்கள் தாம் பாடும் பாட்டுக்களின் பொருள் அறிந்து பாட வேண்டும் என்று பிரபல தமிழ்பாடகியான திருமதி எம். எஸ். சுப்புலட்சுமி கூறினார்.

தமிழ் இசைச்சங்கத்தின் 28வது மகாநாட்டுக்கு திருமதி சுப்புலட்சுமி தலைமை வகித்தார். விழாவை ஐ. நா. உதவிக் காரியதரிசிகளில் ஒருவரான திரு. சி. வி. நரசிம்மன் ஆரம்பித்து வைத்தார். சங்கத்தின் சார்பில் திருமதி சுப்புலட்சுமிக்கு அவர் இசைப் பேரறிஞர் பட்டத்தை வழங்கினார்.

திருமதி சுப்புலட்சுமி தமது தலைமையுரையில், தியாகையர் போன்ற கர்நாடக இசைமேதைகளின் சாகித்தியங்களை எதிர்கால சந்ததியினருக்கு பெரும் பொக்கிஷமாகப் பயன்படும் வகையில் அவைகளைச் சேகரித்து பதிந்து வைக்க வேண்டும் என்று தமிழிசைச் சங்கத்தைக் கேட்டுக் கொண்டார். வருங்கால சந்ததியினருக்குச் செய்யும்பெரும் சேவையாக இது விளங்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இசையை ராகத்துடனும் பாவத்துடனும் பாடவேண்டும். பாடல்களின் ராகங்கள் அவைகளுக்கான பாவங்களைக் குறிக்கும் வகையிலேயே அமைக்கப்பட்டுள்ளன. என்றாலும் பாடல்கள் எந்த மொழியில் இருக்கின்றனவோ அதன் அர்த்தத்தைப் புரிந்து கொண்டுபாடினால்தான் சங்கீதம் முழுமை பெறும் என்றார் திருமதி சுப்புலட்சுமி.

தேவாரம் போன்ற மனதை உருக்கும் திவ்விய பதிப் பாடல்கள் வேறு எந்த மொழியிலும் இல்லையென்று திருமதி சுப்புலட்சுமி குறிப்பிட்டார்.

# இரு யூதர்களுக்கு ரஷ்யாவில் மரணதண்டனை

## விமானத்தை திசை திருப்பமுயன்ற மற்றும் 9 பேருக்கும் தண்டனை

மாஸ்கோ, டிச. 25

சோவியத் ஏயர்லைன்ஸ் விமான மொன்றை திசை திருப்பிக் கடத்திச்செல்லத் திட்டமிட்டு முயன்றதாகக் கைதுசெய்யப்பட்ட பதினொரு பேர்களில் இரண்டு பேருக்கு லெனின் கிராட் விசாரணை மன்றம் மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது. மரணதண்டனை விதிக்கப்பட்டவர்களிருவரும் யூதர்களாவர். மற்றும் ஒன்பது பேருக்கு நான்கு வருடம் முதல் 15 வருடம் வரையான தொழிலாளர் முகாம் வேலைத்தண்டனை விதிக்கப்பட்டது. இந்த ஒன்பது பேரிலும் யூதர்கள் சிலர் உள்ளனர்.

லெனின்கிராட் தீர்ப்பு சம்பந்தமாக ஆலோசிப்பதற்காக இஸ்ரேலிய ஆட்சிமன்றத்தின் அவசரக்கூட்டம் இன்று நடைபெறுகிறது. இதே சமயம் இஸ்ரேலியத் தலைநகரில் பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

# ஈரான் அரசை கவிழ்க்க ஈராக் உதவியுடன் சதி?

டெஹ்ரான், டிச. 25

ஈரானில் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கும் முக்கிய தலைவர்களைக் கொலை செய்வதற்கும் வகுக்கப்பட்டிருந்த சதித் திட்டம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டு முறியடிக்கப் பட்டுள்ளதாம்.

ஈராக் அரசாங்கத்தின் உதவியுடன் இந்தச் சதி நிறைவேற்றப்பட விருந்ததாக ஈரான் அறிவித்துள்ளது. ஈராக்கிலிருந்து ஏராளமான ஆயுதங்கள் ஈரானுக்குள் கடத்திவரப் பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுளதாம். முன்னள் ஈரான் ராணுவ அதிகாரி ஒருவரின் தலைமையில் நடைபெறவிருந்த இந்த சதித் திட்டத்தை ஈராக் பின்னணியிலிருந்து ஊக்குவித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

ஈராக் இதனை மறுத்துள்ளது இந்தத் திட்டத்துக்கும் தங்களுக்கும் எதுவிதத் தொடர்பும் இல்லையென்று அவர்கள் அறிவித்துள்ளனர்.

# சோவியத்தலைவர்களுடன்எகிப்து உயர் தூதுக்குழுபேச்சுவார்த்தை

மாஸ்கோ, டிச. 25

லியோனிட் பிரெஷ்னெவ் நிக்கலாய் பொட்கர்னி அலக்ஸி கொஸிஜின் ஆகியோருக்கும் அலிஸப்ரி தலைமையிலான ஐ. அ. கு. கட்சி அரசாங்கத் தூதுக் குழுவினர்க்குமிடையிலான பேச்சுவார்த்தை நேற்று கிரெம்ளினில் ஆரம்பமாகியது. நேசபூர்வமான, பூரண நல்விளப்பச் சூழலில் நடந்த சம்பாசனையின்போது சோவியத் ஐ. அ. கு உறவுகள் சம்பந்தமான பிரச்னைகள்பற்றியும் இன்றைய சர்வதேச நிலையின் முக்கிய பிரச்னைகள் பற்றியும் இரு தரப்பினரும் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டதாக பத்திரிகைகளுக்கு விடுக்கப்பட்ட அறிக்கை கூறுகிறது, மேற்காசிய நிலை குறித்து கூடுதல் கவனம் செலுத்தப்பட்டது.

அனைத்துத் துறைகளிலும் சோவியத் - ஐ. அ. கு. ஒத்துழைப்பு வளர்ச்சியுற்றுள்ளமை குறித்து இரு தரப்பினரும் திருப்தி தெரிவித்தனர். இந்த ஒத்துழைப்பை மேலும் விபாபிக்க தாம் தயாராக இருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

பேச்சுவார்த்தைகளில் ஐ. அ. கு. தரப்பில் உதவிப் பிரதமரும் எண்ணெய் அமைச்சருமான அஸீஸ் ஸித்திக், உதவிப் பிரதமரும் அயல்நாட்டு அமைச்சருமான மஹ்மூத் றியாத், ராணுவ அமைச்சர் முஹம்மத் ஃபவ்ஸி சோவியத் யூனியனிலுள்ள ஐ. அ. கு. ஸ்தானிகர் முஹம்மத் இமுராத் காலிப் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சோவியத் தரப்பில் சோ. க. க. மத்தியக் கமிட்டியின் செயலாளர் போரிஸ்பொனமரோவ், சோவியத் அமைச்சரவையின் உப தலைவர் விளாடிமீர் நொவிகோவ் அயல்நாட்டு அமைச்சர் ஆந்திரி குரோமிக்கோ பாதுகாப்பு அமைச்சர் மார்ஷல் ஆந்திரி கிரெக்கோவ் அயல்நாட்டு வர்த்தக அமைச்சர் நிக்கலாய் பட்டோலிசேவ் அயல்நாடுகளுடன் பொருளாதார உறவு கொள்ளும் அரசாங்கக் கமிட்டியின்தலைவர் ஸெமியோன் ஸகச்கோவ் ஐ. அ. கு. வுக்கான சோவியத் தூதுவர் விளடிமீர் விநோகிரடோவ், அயல் நாட்டு அமைச்சின் மத்திய கிழக்குத் திணைக்களத் தலைவர் மிக்காயில் ஸிடென்கோ ஆகியோர் கலந்து கொண்டனர்.

பேச்சுவார்த்தைகள் பெரும்பயன்தருமென ...

## புதிய உலக சாதனை

நிப்ரோவ்ஸ்க் டிச. 25

ஆதாம்நாட்டோவ் சோவியத் யூனியன் பளுதூக்கும் போட்டியில் 114 கிலோகிராம் பாரத்தைதூக்கி சோவியத் சம்பியன்ஸ்தானத்தை சுவீகரித்துக் கொண்டார்.

ஆதம் ஒரு 25வயதானபத்திரிகையாளராகும்.

இவருடைய இச்சாதனை 'பீனவெய்ட்' பிரிவில் ஒரு உலக சாதனையாகும்.

## இடமாற்றம்

மாவிட்டபுரம், வெள்ளி

காங்கேசன்துறைப் பட்டினசபையில் மின்சாரப் பகுதி அத்தியட்சகராகக் கடமையாற்றிய திரு, எஸ். பரமேஸ்வரன் வருகிற ஜனவரி மாதம் 1ம் திகதி தொடக்கம் கடுகண்ணவை நகரசபைக்கு பதவியுயர்வுடன் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார், காங்கேசன் துறைபட்டினசபையில் 3ம் தர தராதரத்துடன் கடமையாற்றிய இவர் 2ம்தர பதவி உயர்வுபெற்று இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

# திருமலை அபயபுரத்தில் பிரிட்டிஷ் துப்பாக்கிகள்

கோட்டை, வெள்ளி

திருகோணமலையிலுள்ள அபயபுரம் என்னும் கிராமத்துக்கண்மையில் பிரிட்டிஷார் இந்நாட்டை ஆட்சிபுரிந்த காலத்தில் உபயோகிக்கப்பட்ட துப்பாக்கிகளும் பெரிய தாங்கியொன்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அகழ்வராய்ச்சிப் பகுதியினர் சமீபத்தில் திருமலைப் பகுதியில் ந[illegible] வாராய்ச்சியின் [illegible] படி பொருட்களைக் கண்டுபிடி[illegible]னர்.

கண்டெடுக்கப்பட்ட மேற்படி துப்பாக்கிகளும் தாங்கியும் பிரிட்டிஷ் காலத்தின் முற்பகுதியைச் சேர்ந்தனவாக உள்ளதாகத் திருமலை அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

பிரிட்டிஷார் இலங்கையை ஆட்சிபுரிந்த காலத்தில் திருமலையில் உள்ள [illegible] அபயபுரப்பகுதி இராணுவ முக்கியத்துவம் [illegible]ந்த[illegible] இருந்திருக்[illegible] இப்பகுதியில் இராணுவத்தினர் [illegible]

"இந்தியா மீது வலுந்தாக்குதல் நடந்தால்

# முன் எப்போதையும் விட வலுவாக எதிர்ப்போம்"

— இந்திரா

ஸ்ரீநகர், டிச. 25

இந்தியாமீது ஆயுதம் கொண்டு மீண்டும் எவராவது தாக்க முற்பட்டால் முன் எப்போதையையும் விட வலுவாக இந்தியா அதனை எதிர்த்துத் தாக்குதல் நடத்தும் என்று இந்திய பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தி கூறினர்.

காங்கிரஸ் ஊழியர்கள் மத்தியில் திருமதி. காந்தி உரை நிகழ்த்தினர்.

அண்டை நாடுகளுடன் நட்பைத் தவிர வேறு எதையும் நம் விரும்பவில்லை. ஆனால் எம்மீது எவரும் வலுத்தாக்குதல் நடத்தினல் நாம் வாளாவிருக்க மாட்டோம் என்றார் திருமதி. காந்தி.

சட்டசபைக்கு தெரிவாகி வந்தபின்னர் அரசியல் சாஸனத்தைக் குலைப்பதற்கு எவரும் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்று பிரதமர் கூறினர் எவர் பிரதம மந்திரியாக இருந்தாலும், எந்தக் கட்சி ஆட்சியிலிருந்தாலும், அரசியல் சாஸனத்தைக்குலைப்பதற்கு அனுமதிக்கமுடியாது என்றார்.

# பலாத்காரப் பிரசவத்துக்கு [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துழைப்பை மேலும் விஸ்தரிக்க தாம் தயாராக இருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

பேச்சுவார்த்தைகளில் ஐ. அ. கு. தரப்பில் உதவிப் பிரதமரும் கைத்தொழில் [...]கிழக்குத் திணைக்களத் தலைவர் மிக்காயில் ஸிடென்கோ ஆகியோர் கலந்து கொண்டனர்.

பேச்சுவார்த்தைகள் பெரும்பயன்தருமென அலி சப்ரி இன் தெரிவித்தார்.

[...]பட்டுள்ளார், காங்கேசன் துறைப்பட்டினசபையில் 3ம் தர தராதரத்துடன் கடமையாற்றிய இவர் 2ம்தர பதவி உயர்வுபெற்று இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

மயிலிட்டிக் கிராமசபையில் மின்சாரப்பகுதி அத்தியட்சகராகக் கடமையாற்றும் திருஎஸ். மயில்வாகனபிள்ளையும் ஜனவரி முதல்பதவியுயர்வுபெற்றுசாவகச்சேரி நகரசபைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவரது இடத்திற்கு உரும்பராய் பட்டினசபையில் கடமையாற்றும் திரு. காளிதாஸ் இடமாற்றம் பெற்றுள்ளார்.

0

வல்வெட்டித்துறை வெள்ளி

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் லிகிதர்களாகக் கடமையாற்றிவரும் திரு. ஏ. சிவபாதசுந்தரம் வவுனியா பிஸ்கால் கந்தோருக்கும், திரு எஸ். சின்னத்துரை கொழும்பு பிஸ்கால் காரியாலயததிற்கும், திரு வி ஏ. நடராசா திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்திற்கும் அடுத்தமாதம் 1-ம் திகதியிலிருந்து இடமாற்றம் செய்யப் பட்டிருக்கிருர்கள்,

அகழ்வாராய்ச்சிப் பகுதியினர் சமீபத்தில் திருமலைப் பகுதியில் நடாத்திய அகழ்வாராய்ச்சியின்போதேமேற்படி பொருட்களைக் கண்டு பிடி[...]னர்.

அ[...]புரத்திலுள்ள ஆலயம் ஒன்றுக்குச் செல்லும் பாதையில் நிலத்தின்கீழ் [...]

[...] உள்ள [...] அபயபுரப்பகுதி இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக இருந்திருக்க வேண்டும். இப்பகுதியில் இராணுவத்தினர் தங்கியிருந்து சேவையாற்றி இருக்க வேண்டும் எனவும் கருதப்படுகிறது.

# கட்டிடக்கலைப் போட்டியில் இலங்கையும் பங்குபற்றும்

லண்டன், டிச 25

லண்டனிலுள்ள புதிய பாராளுமன்றக் கட்டிட அமைப்பு சம்பந்தமாக நடைபெறும் சர்வதேசப் போட்டியில் இலங்கை உட்பட சுமார் ஆயிரம் சாம்ராஜ்ய கட்டிடக்கலைஞர்கள் பங்குபற்ற விருக்கிருர்கள்.

தற்போதைய பிரிட்டிஷ் பாராளுமன்றத்திற்கு அருகாமையில் நிர்மாணிக்கப் படவிருக்கும் புதிய கட்டிடம் 450பிரிட்டிஷ் பாராளுமன்ற அங்கத்தவர்களுக்கு தங்கு அறைகளும் மற்றும் வசதிகளையும் கொண்டதாக அமையும். 5,400,000பவுண்கள் செலவில் இப்புதிய பாராளுமன்றக் கட்டிடம் அமைக்கப்படும். இலங்கை உட்பட மற்றும் சாம்ராஜ்ய நாடுகளிலிருந்து இதுவரை கிட்டத்தட்ட 300 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளதாக லண்டனில் அறிவிக்கப் பட்டது.

இப்போட்டிக்கு விண்ணப்பிக்கும் இறுதிநாள் 1971ம் ஆண்டு ஏப்ரல் 19ந் திகதியாகும். இப்போட்டிக்கான முதற்பரிசு 8000 பவுண்களாகும், இரண்டாவது பரிசுத் தொகையாக 4,500 பவுண்களும், மூன்ருவது பரிசுத் தொகையாக 3,000 பவுண்களும் வழங்கப்படும்.

## லண்டனில் விசேஷப் பயிற்சி பெற்ருர்

லண்டன், டிச. 25

இலங்கை வருமானவரி இலாகாவில் வரி மதிப்பீட்டாளராகக் கடமையாற்றும் திரு. கிறிஸ்தோபர் மேதர் அண்மையில் லண்டனில் தமது பயிற்சியை முடித்துள்ளார். ஜூலை மாதம் 21ந் திகதியிலிருந்து டிசம்பர் 17ந் திகதிவரை நடை பெற்ற இந்த ஆறுமாத விசேஷ பயிற்சியில் இவருடன் 12 நாடுகளைச் சேர்ந்த 13 அரசாங்க அதிகாரிகள் பங்குபற்றினர்.

லண்டன் வருமானவரிக் காரியாலயத்தின் வெளிநாட்டுப் பிரிவு இந்தப் பயிற்சி வகுப்பை ஒழுங்கு செய்தது. பிரிட்டனின் வருமான வரிச் சட்டங்கள் பற்றியும் பிரிட்டிஷ் நீதிமன்றங்களில் இச்சட்டங்கள் எவ்விதம் கையாளப்படுகிறது என்பதையும் இந்த அதிகாரிகள் படித்தறிந்தனர். இப் பயிற்சி காலத்தின்போது இவர்கள் நீதிமன்றங்களில் நடைபெற்ற வரி இறுப்பு வழக்குகளை நேரில் அவதானித்ததுடன் வரி அறவிடும் காரியாலயங்களுக்கும் பயிற்சி நிலையங்களுக்கும் விஜயம் செய்தனர்.

## பாவனையாளர் சபைக்கு ஆலோசனை

மாவிட்டபுரம், வெள்ளி

வெளிநாடுகளில் உள்ளது போல் இலங்கையிலும் 'பாவனையாளர் சபை' கள் நிறுவ பொதுமக்களிடமிருந்து கைத்தொழில் அமைச்சினுல் ஆலோசனை கோரப் பட்டுள்ளது.

பாவனையாளர்களின் பிரச்னை அறியவும், அவர்களுக்குஉதவிசெய்யவும் அவர்களின் நலன்களைப் பேணவும் வெளிநாடுகளில் 'பாவனையாளர்கள்சபை'கள் அமைக்கப் பட்டுள்ளன.

வடபகுதியில்உள்ள கிராம முன்னேற்றச் சங்கங்கள், மாதர் சங்கங்கள், சமூக சேவா சங்கங்கள், பெற்ருர் ஆசிரியர் சங்கங்கள் ஆகியன இக் ஆலோசனைகளை வழங்கி வருகின்றன

## ஜின்னுநினைவு தினம்

கராச்சி, டிச. 25

பாகிஸ்தானை உருவாக்கிய சிற்பிகாபிதே ஆஜம் முகம்மதலிஜின்னுவின் நினைவு தினம் இன்று பாகிஸ்தான் முழுவதிலும் மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பட்டது தேசபிதாவின் நினைவு தினத்தை யொட்டி அதிபர் யாஹ்யாகான் நாட்டுமக்களுக்கு விடுத்துள்ள செய்தியில் தேசபிதா காட்டிய வழியில் மீண்டும் நாட்டில் ஜன நாயக ஆட்சி அமையவிருப்பதுபற்றிக்குறிப்பிட்டார்.

## இவர்களுக்கு காணிகிடைக்கும்

சாய்ந்தமருது, வெள்ளி

அம்பாறை மாவட்டத்தில் தற்போது நிலமில்லாதிருக்கும் ஏழை விவசாயிகளுக்கு கொண்டவெட்டுவான் பகுதியிலுள்ள சுமார் 500 ஏக்கர் முடிக்குரிய காணியை வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் திரு. பிரட்மன்வீரக்கூன் இதற்கான காணிக்கச்சேரியைவிரைவில் நடத்துவார். அம்பாறை மாவட்டத்தில் விவசாயம் செய்வதற்கேற்ற நிலங்கள் தூர்ந்து கிடப்பதாகவும் இவற்றையும் ஏழைவிவசாயிகளுக்குக் காணிக்கச்சேரி மூலம் வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

## மாவையில் மார்கழிப் பஜனை

மாவிட்டபுரம், வெள்ளி

மார்கழிமாத அதிகாலைப் பஜனை மாவைக்கந்தன் ஆலயத்தில் மார்கழிமாதம் தொடக்கம் நடைபெற்று வருகிறது. அதிகாலைப்பூசை ஆராதனைகளையடுத்து ஐம்பதுக்குமதிகமான அடியார்கள் பஜனையில் கலந்து கொள்ளுகின்றனர்.

அந்தரங்கக்காரியதரிசிகள்

# அலவன்ஸ் உயர்த்தும்படி பிரதமரிடம் கோரிக்கை

கோட்டை, வெள்ளி

அமைச்சர்களின் அந்தரங்கக் காரியதரிசிகள் நேற்று முன் தினம் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவைச் சந்தித்து தங்களுக்குள்ள சில கஷ்டங்கள் பற்றி எடுத்து விளக்கினர்

அரசாங்கத் தேவைகளுக்கு அரசாங்கத்துக்குச் சொந்தமான மோட்டார் வாகனங்களை உபயோகிக்க அனுமதிதரவேண்டுமென்றும், 1947-ம் ஆண்டு முதல் உயர்த்தப்படாமலிருக்கும் அலவன்ஸ் உயர்த்தவேண்டும் என்றும் இவர்கள் பிரதமரிடம் வற்புறுத்தினர். வாழ்க்கைச் செலவுகள் அதிகரித்துக்கொண்டே போகின்ற போதிலும் 23 வருடங்களாக அலவன்ஸ் ஒரே நிலையாக இருப்பது பற்றி இவர்கள் கவலை தெரிவித்தனர். தங்களுக்கு வீட்டு வசதிகள் செய்துதரப்பட வேண்டும் என்றும் அந்தரங்கக் காரியதரிசிகள் வற்புறுத்தினர்.

இவர்களின் கஷ்டங்கள் பற்றித்தாம் அறிந்துகொண்டுள்ளதாகவும், இதுபற்றிய மகஜரை சமர்ப்பிக்கும்படியும், மந்திரி சபையில் ஆராய்வதாகவும் பிரதமர் வாக்குறுதியளித்தார்.

ராணிமாளிகையில் நடைபெற்ற இச்சந்திப்பில் சபாநாயகரின் அந்தரங்கக் காரியதரிசி உட்பட அமைச்சர்களின் அந்தரங்கக்காரியதரிசிகளும் அங்கம்வகித்தனர்.

## சீனித் தட்டுப்பாடு இல்லை

கோட்டை, வெள்ளி

நாட்டில் சீனிக்குத் தட்டுப்பாடு இல்லையெனவும், 1200 தொன் சீனி இருப்பில் உள்ளதெனவும் உணவு அமைச்சு தெரிவித்துள்ளது

கூட்டுறவுச் சங்கங்கள், சில்லறை வியாபாரிகள் முதலியோரிடம் பாவனையாளர்கள் தங்களுக்குத் தேவையான அளவு சீனியைப் பெற்றுக்கொள்ளலாம் எனவும், கடந்த வார இறுதியில் இவற்றுக்கு 900 தொன் சீனியை உணவு அமைச்சு விநியோகித்துள்ளது எனவும் அறிவித்துள்ளது

மேலும் இரு சீனிக்கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்தில் வந்துள்ளதாகவும் தெரியவருகிறது. பங்கீட்டரிசிப் புத்தகத்துக்குச் சீனி வழங்கப்படுமெனச் சமீபத்தில் வெளியான செய்தி தவறானதெனவும் உணவு அமைச்சு அறிவித்துள்ளது.

## "இளைஞர் ஒத்துழைப்பு வேண்டும்"

சுன்னுகம், புதன்

"சனசமூக நிலையங்கள் மூலம் நாட்டுக்கும் சமூகத்துக்கும்சேவைசெய்ய வேண்டும், நாட்டில் நிலவும் கொலை, களவு, கசிப்பு போன்றவற்றை ஒழிப்பதற்கு இளைஞர்கள் முன்வந்து பொலிஸ் பகுதியினர் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும்" என்று சுன்னுகம் பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி திரு. எஸ் நவரத்தினராசா சுன்னுகம் மயிலணி வடக்கு ஜனசக்தி சனசமூக நிலையத்தினர் நடாத்திய கருத்தரங்கில் கூறினர். கருத்தரங்கிற்கு திரு. சி. சிவஞானம் தலைமை வகித்தார்.

## ஆலயம் புனருத்தாரணம்

மாவிட்டபுரம், வெள்ளி

சரித்திரப்பிரசித்திபெற்ற கீரிமலை நகுலேஸ்வரஆலயத்தில் தற்போது புனருத்தாரண வேலைகள் நடைபெற்று வருகின்றன.

பல லட்சம் ரூபா செலவில் நடைபெறும் புனருத்தாரண வேலைகள் முடிவடைந்ததும் மகாகும்பாபிஷேகம் நடைபெறும்.

# பலாத்காரப் பிரசவத்துக்கு யுவதியும் சிசுவும் பலி?

## சந்தேகத்தில் டாக்டர் கைது

மட்டுவில், வியாழன்

எட்டுமாதக்கர்ப்பிணிப் பெண்ணைப் பலாத்காரமாகப் பிரசவிக்கச் செய்ததன் மூலம் குழந்தையும் தாயும் மரணமானதாகச் சந்தேகிக்கப்பட்டு டாக்டர் ஒருவர் பொலிசாரினல் கைதுசெய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டார் இறந்த சிசுவின் சடலத்தை சுடலையில் புதைகுழியிலிருந்து பளைப்பொலிசார் மீட்டுள்ளனர்.

முல்லைத்தீவு பொலிஸ் பகுதியைச் சேர்ந்த கொக்கிளாய் கடற்கரைச் சேணியைச் சேர்ந்த 18 வயதான இளம் பெண் ஒருவர் இவ்வித பரிதாபமரணத்திற்குள்ளானர் விவாகமாகாத இவரது எட்டுமாதக்கர்ப்பத்தைச் சிதைப்பதற்கு தனியார் துறை வைத்தியர் ஒருவர் வாழைப்பழத்தில் குளிகை மருந்தைக் கொடுத்து ஆயுதங்கள் பாவித்துப் பலாத்காரமாகப் பிரசவிக்கச் செய்ததாகவும், இதன் மூலம் யுவதிக்கும் சிசுவுக்கும் மரணம் சம்பவித்ததாகவும் கூறப்படுகிறது.

பிரஸ்தாப டாக்டரைச் சந்தேகத்தின் மீதுகைது செய்தபளைப் பொலிசார் சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கே. விக்கினராசா முன்னிலையில் ஆஜர் செய்தனர். மாஜிஸ்திரேட் டாக்டரை றிமாண்டில் வைக்க உத்தரவிட்டுள்ளார்

கர்ப்பவதியான யுவதிக்கு குளிகைமருந்தைக் கொடுத்து பிரத்தியேகமான அறையில் வைத்து. ஆயுதங்கள் மூலம் அந்த டாக்டர்பலாத்காரமாகக் குழந்தையைப் பிரசவிக்க செய்ததாகவும் இறுதி நேரத்திலும் குறிப்பிட்ட பெண்ணை பெற்ருர். ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்ல டாக்டர் அனுமதியளிக்கவில்லையென்றும், ஈற்றில் பிணமாக முகமாலையிலுள்ள இறந்தவரின் மூத்த சகோதரியின் வீட்டில் இறக்கிவிட்டுச் சென்றதாகவும் விசாரணையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதுசம்பந்தமாக பளை பொலிசாருக்குத் தகவல் கிடைத்ததும் இன்ஸ்பெக்டர் திரு மிஸ்கின், கான்ஸ்டபிள் திரு. கதிர்காமநாதன் ஆகியோர் தலைமையிற் சென்றபொலிஸ் கோஷ்டி டாக்டரையும் இப்பிரசவத்திற்காகப் பாவிக்கப்பட்டதாகக்கருதப்படும் ஆயுதங்களையும் இரத்தம் தோய்ந்த துணிகளையும், கைப் பற்றியதுடன் சிசுவின் உடலைப் புதைத்தவரெனக் கருதப்படும் நகரசுத்தி தொழிலாளியான கறுப்பையா என்பவரையும் கைது செய்து. அவரின் உதவியுடன், சுடலையில் புதைக்கப்பட்டிருந்த சிசுவின் சடலத்தையும் கைப்பற்றினர். டாக்டரை றிமாண்டில் வைக்க உத்தரவிட்ட மாஜிஸ்டிரேட் இம்மாதம் 25ம் திகதி அவரைக் கோட்டில் ஆஜர் செய்யும்படி உத்தரவிட்டார். பளைப்பொலிசார் தொடர்ந்து புலன் விசாரணை செய்து வருகிருர்கள்.

மக்கள்வங்கி

## வீடுகட்ட கடன்வழங்கும்

கோட்டை, வெள்ளி

வீடுகட்டுவதற்கு 25,000 ரூபா வரை கடன் வழங்க புதிய கடன்திட்டம் ஒன்றை மக்கள் வங்கி தயாரித்துள்ளது. மக்கள் வங்கியினுல் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட முதலீட்டுச் சேமிப்புத் திட்டதில் சேர்பவர்களுக்கு மட்டுமே மேற்படி கடன்வழங்க மக்கள் வங்கி தீர்மானித்துள்ளது. இத்திட்டத்தில் சேருவோர் குறைந்தபட்சம் 5 வருடங்கள் பணம் செலுத்தவேண்டும்,

வீடுகட்டும் காணியை மக்கள் வங்கிக்கு ஈடுவைத்து உறுதிப்படுத்தினுல்மட்டுமே மக்கள் வங்கி இக்கடனை வழங்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

## சீனு சென்றனர்

கோட்டை, வெள்ளி

சீனுவில் நடைபெறும் முதலாவது வர்த்தகப் பொருட்காட்சியில் கலந்து கொள்ள லங்காசதொசலாத் தலைவர் திரு. டக்ளஸ் பெரேரா தலைமையில் குழு ஒன்று சென்றுள்ளது.

இக்குழு மக்கள் சீனக் குடியரசிலிருந்து துணிகள் பெறுவது சம்பந்தமான பேச்சுவார்த்தைகளை நடத்தும் என எதிர் பார்க்கப் படுகிறது.

## வெற்றிபெற்றவர் குத்திக் கொலை

டாக்கா, டிச. 25

கிழக்குப் பாகிஸ்தானில் அவாமிலீகின் சார்பில்சட்டசபைக்குத் தெரிவு செய்யப்பட்ட ஒருவர் கத்தியால் குத்திக்கொலைசெய்யப்பட்டிருக்கிருர் அவர்பெயர் ஆனும ட்ரஃபீக் இப்பகுதியில் வேறு பலகலகத்திக்குத்து சம்பவங்களும்இடம் பெற்றுள்ளன.

## ரஷ்யமாஜி அதிபர் மரணம்

மாஸ்கோ. டிச. 25

சோவியத் யூனியனின் முன்னுள் அதிபர் நிக்கோலாய் செபஞேவ் காலமானர். 1946-ம் ஆண்டு முதல் 1953-ம் ஆண்டு வரை இவர் அதிபராக இருந்தார்.

## அல்ஜீரியாவுக்கு சோவியத் உதவி

அல்ஜியஸ், டிச 25

சோவியத் ஒத்துழைப்புடன் அல்ஜீரியாவில் ஆறு பெரும் அணைக்கட்டுக்கள் நிர்மானிக்கப்படும். இதற்கான ஒப்பந்தம் இங்கு கைச்சாத்திடப்பட்டது,

நாட்டின் நீர்வளத்தைக் கட்டிவளர்க்க இது உதவும் என்று ஜல திட்ட நீர்ப்பாபாசன சபையின் தலைவர் பொன்பெல்லா கூறினுர்.

## அபிவிருத்தி

கோட்டை, வியா

ஆயுள்வேத வைத்திய சம்பந்தமான விருத்திக்காக வகுத்த விதிமுறைகளைநடைமுறைப்படுத்த வேண்டுமென செனட்சபையில் வலியுறுத்தப்பட்டது,

இதுசம்பந்தமாக திரு. ஜயசூரியா பேசுகையில், ஆயுள்வேத வைத்தியமுறைகளை விருத்தி செய்யும் திட்டத்தை முதன்முதலாக திரு. எஸ் டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா கொண்டு வந்தார் என்றும் இன்றைக்கு ஆயுள்வேத வைத்திய சிகிச்சையை 60 வீதமான மக்கள் பெற்று வருகின்றனர் என்றும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

உலகம் ஒரு போர்க்களம். அதில் நம் வாழ்க்கை ஒரு போராட்டம். போராட்டத்தில் வெற்றிபெற நாம் கைக்கொள்ளவேண்டிய ஆயுதம் எது? வெற்றி பெற்றே திருவோம் என்ற எண்ணம், தன் மனத்தில் தான் கொள்ளும் திடமான உறுதி.

— நெப்போலியன்.

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna
Post Box 49, Jaffna; Telephone: 689

சாதாரண வருடம் மார்கழி மாதம் 11-ந் திகதி (26-12-70)

## பரீட்சைக் குழப்படி

இலங்கையில் இப்பொழுது நடைபெற்றுவரும் கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதாரண)ப் பரீட்சையிலே சில கேள்வித்தாள்கள் முன்கூட்டியே வெளியாகிவிட்டனவாம். கணக்கு, பொருளாதாரம் இவ்விரண்டிலும் மீண்டும் பரீட்சைகளை நடத்துவதென்று அறிவித்திருக்கிறார்கள் பரீட்சையிலே எல்லா கேள்வித்தாள்களுமே வெளியாகிவிட்டதாக வதந்திகள் அடிபட்டனவெனினும், அதற்கு ஆதாரமில்லையென்றும், ரகசியபொலிசார் விசாரணை செய்துவருவதாகவும், இப்புகார்களில் உண்மையிருப்பின், பரீட்சை அனைத்தையுமே ரத்துசெய்து மீண்டும் நடத்தவேண்டியிருக்குமென்றும் கல்வி அமைச்சர் தெரிவிக்கின்றார்.

மூன்று லட்சம் பேர்களுக்கு மேல் இப் பரீட்சைகளை எழுதுகின்றார்கள் என்பதை நினைவுகூரும்போது மீண்டும் எக்காரணம் பற்றியும் இவற்றை நடத்துவதாயின் அதனால் சிறப்பாக மாணவர்களுக்கும், மற்றவர்களுக்கும் எவ்வளவு சங்கடமென்பதை விளக்கத் தேவையில்லை. புதிதாக நடத்தும் பரீட்சைகளிலும் இவ்வித குழப்படி ஏற்பட்டு கேள்வித்தாள்கள் முன்கூட்டியே வெளியாகாதென்பதற்கு என்ன உத்தரவாதம்?

கேள்வித்தாள்கள் முன்கூட்டியே வெளியாவது இது முதல் தடவையல்ல. ஏற்கனவே பன்முறை இவ்விதம் வெளியாகி, மறு பரீட்சையும் நடந்துள்ளது இதில் பலர் சம்பந்தப்பட்டிருப்பதாலும், பெருந்தொகையான தாள்கள் அச்சடிக்கப்படுவதாலும் கேள்விகள் அம்பலமாவதில் வியப்பில்லை கண்காணிப்பில் ஒரு சிறு பிழை விட்டாலும், ரகசியம் அம்பலமாகி, பரீட்சை ஏற்பாடனைத்தும் குலைவதாகும். இம்முறை சில பாடங்களில் முன்கூட்டி வெளியான கேள்வித்தாள்களை உண்மையென்று நம்பி பல மாணவர்கள் அக் கேள்விகளுக்கான விடைகளை மட்டும் படித்து பின்னர் அக் கேள்விகள் வராமல் ஏமாற்றமடைந்ததாகவும் தெரிகிறது. எவ்வளவுதான் கண்டிப்பாக இருப்பினும் ரகசியம் வெளியாகாதென்பதற்கு உத்தரவாதமில்லை. ஆகவே இனி இவ்விதம் நடவாமல் தடுக்கவும், மாணவர்களுக்கு வீண் சங்கடங்கள் ஏற்படாமல் செய்யவும், நன்கு யோசித்து தக்க ஒழுங்குகளைச் செய்யவேண்டியது அவசரமும் அவசியமுமாகும்.

மாணவர்களின் திறமையை அறிய இப் பரீட்சை முறை அவ்வளவு சரியானதல்லவென்று சில கல்வி நிபுணர்களே கருதுவர் சில நாடுகளில் பரீட்சைமுறையே அடியோடு மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. வகுப்புகளிலே மாணவர்களுக்கு அடிக்கடி பரீட்சை வைத்து அவர்களது திறமைகளை ஆசிரியர்கள் அறிந்து அவ்வப்போது புள்ளிகளைப் பதிவு செய்வதுடன், அப் பரீட்சை பெறுபேறுகளுக்கு ஐம்பது புள்ளிகளும் அரசாங்க பரீட்சைகளுக்கு ஐம்பது புள்ளிகளும் அளித்து தரப்படுத்தி முடிவுசெய்லாம். அதாவது பரீட்சைகளை மட்டும் வைத்து மாணவரின் திறமையைத் தீர்மானிக்காமல் வகுப்புகளில் அவர்களுடைய சாதனைகளையும் கவனிப்பது பலவிதங்களிலும் நன்மையாகும். கல்விமான்கள் கூடி பரீட்சை விஷயமாகத் தக்க சீர்திருத்தம் செய்ய வேண்டிய சமயம் வந்துவிட்டது.

வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபையின் முப்பத்து மூன்றுவது வருடாந்தக் கூட்டுறவு மகாநாடு இன்று சனிக்கிழமை காலை ஐக்கிய மேற்பார்வைச் சபைக் கட்டிடத்தின் வீரசிங்கம் மண்டபத்தில் ஆரம்பமாகிறது; உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் திரு. ரி. பி. இலங்கரத்ன இம் மகாநாட்டை ஆரம்பித்து வைக்கிறார். வடபகுதியில் கூட்டுறவு இயக்கத்தின் நிலை பற்றியும் கூட்டுறவு இயக்கத்தின் மூலம் நாட்டின் இன்றைய முக்கிய பிரச்னைகளுக்கு எவ்வாறு தீர்வு காணலாம் என்பது பற்றியும் வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபைத் தலைவர் திரு இ. இராசரத்தினம் இக்கட்டுரையில் தெளிவாக விளக்குகிறார்.

# நாட்டின் சகல பிரச்னைகளுக்கும் கூட்டுறவு மூலம் தீர்வுகாணலாம்

இ. இராஜரத்தினம்
(வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச்சபைத்தலைவர்)

இலங்கையிலேயே வழிகாட்டு உச்ச நிறுவனமாகத் திகழும் வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபை எடுக்கும்முப்பத்துமூன்றுவது வருடாந்தக் கூட்டுறவு மகாநாடு இதுவாகும். முப்பது ஆண்டுகளுக்கு மேலாக வடபகுதிக் கூட்டுறவு இயக்கத்தின் பாராளுமன்றமாக இம்மகாநாடு விளங்கி வந்திருக்கின்றது என்பது மிகையாகாது. கூட்டுறவு இயக்கத்தைப் பாதிக்கும் முக்கிய பிரச்னைகளை அலசிஆராய்ந்து கருத்துக்களைப் பரிமாறுவதற்கு வடபகுதிக் கூட்டுறவாளர்கள் ஆண்டுதோறும் மகாநாடு கூட்டுகின்றனர் இம் மன்றத்தில் இருந்துதான் கூட்டுறவு இயக்கத்தைப் பற்றிய முக்கிய தீர்மானங்கள் உருவாகியிருக்கின்றன. ஆதலால், இம்மகாநாட்டை வடபகுதிக் கூட்டுறவாளர்களின் குரல் எனக்கொள்வது சாலவும் பொருந்தும்.

இச்சமயத்திலே அமரத்துவம் அடைந்த இப்பகுதிப் பழம்பெரும் கூட்டுறவுத் தலைவர்களை குறிப்பாக அமரர் வி வீரசிங்கத்தை நினைவு கூருதல் பொருத்தமாகும் இம்மண்டபம் அமரர் வீரசிங்கத்தின் நாமத்தையே தாங்கிநிற்கிறது. இப்பெரியார்களின் செந்நெறிப்பாதையில செல்வதற்கு நாம் முயன்றுவருகின்றோம்.

வடபகுதிக் கூட்டுறவுஇயக்கத்தை அறிந்தவர்களுக்கு அது எவ்வளவு ஆழமாக வேரூன்றியிருக்கின்றது என்பதும். அதன் விசாலமான செயல் எல்லையும் நன்குதெரியும். வடபகுதிக் கூட்டுறவு இயக்கத்தின் வரலாற்றைப் பற்றியும், அதன் முயற்சிகள் பற்றியும் விரிவாக எடுத்துரைப்பதற்கு இது தக்க சமயமல்ல. ஆனால்கூட்டுறவு இயக்கத்தின் இன்றைய நிலைமையைப் புரிந்துகொள்வதற்குஇன்றியமையாத சில முக்கிய உண்மைகளைச் சுருக்கமாகக் குறிப்பிடுவது பொருத்தமாகும். இலங்கையின் ஏனைய பகுதிகளைப் போன்று இங்கும் முதலில் ஐக்கிய நாணயசங்கங்களும், சிக்கனச் சங்கங்களும் உருவாக்கப்பட்டன. இரண்டாம் உலகப் போர்க்காலத்தில் அத்தியாவசிய உணவுப் பொருள்களை மக்கள் அனைவருக்கும் சமதையாக விநியோகிக்கவேண்டி ஏற்பட்டபோது கூட்டுறவு இயக்கம் அரசையும், மக்களையும் காப்பாற்ற முன்வந்தது. பின்பு, இலங்கை உணவுப்பொருள் உற்பத்தியைப்பெருக்கமுனைந்தபோது வடபகுதிக் கமக்காரர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம், குறிப்பாக அத்தியாவசியமான உபஉணவுப் பொருள்களைப் பெருக்குவதில் தமது உழைப்பை நல்கினர் சில ஆண்டுகளுக்கு முன்னர் அரசு துணிவகைகளை சமமாக எல்லோருக்கும் விநியோகிப்பதில் பிரச்சினைகளை எதிர்நோக்கியது. இந்நிலையில் கூட்டுறவு இயக்கமே மறுமுறையும் அரசாங்கத்தையும், மக்களையும் காக்க முன்வந்தது. இது போன்ற பெரிய முயற்சிகளை மேற்கொள்ளும்போது தவிர்க்க முடியாத குறைகள் ஏற்படுவது மனித இயல்பு. ஆனால், முழுமொத்தமாக நோக்கும்போது கூட்டுறவு இயக்கம் அரசுக்கும் மக்களுக்கும் தனது கடமையைச் செவ்வனே நிறைவேற்றியுள்ளதென்பது உண்மை.

நாம் கேட்கவிரும்புகின்றோம் ஊழல்கள் மலிந்திருக்கும்போது அரசாங்கம் வாழாவிருக்க முடியாதென்பதனை நாம் ஒப்புக்கொள்கிறோம் ஆனால் இப்பிரச்னைக்குத் தீர்வுகாணவேண்டுமாயின் சங்கங்களின் குடியாட்சிப்பாங்கான கட்டுப்பாட்டுரிமையை மீறுது ஊழல்கள் நிறைந்தவை என எண்பிக்கப்படும் நிர்வாகக் குழுக்களைக்கலைப்பதற்கு அரசாங்கம் வேண்டிய சட்ட அதிகாரங்களை இயற்றலாம். அனைத்துலக ரீதியாக இலங்கைக் கூட்டுறவு இயக்கம் ஓர் அளவுக்கு நல்ல பெயரைச் சம்பாதித்துள்ளது. கூட்டுறவு இயக்கத்தை... தல் வேண்டும் ஆதலால் ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு சங்கத்திலும் பதினைந்துபேர் அடங்கிய நெறியாளர் குழுக்களில் ஒன்பது பேரினை நியமிப்பதென்ற விதியினை கெட்டியாகக் கடைப்பிடிக்கவேண்டாமெனநாம் கௌரவ அமைச்சரை வேண்டுகின்றோம். தம் மீது கொண்டுள்ள நம்பிக்கையினை எண்பிப்பதற்கு கூட்டுறவாளர்களுக்கு ஒரு வாய்ப்பளிக்கப்படவேண்டும். எல்லா அத்தியாவசியப் பொருட்களையும் விநியோகிக்கும் பொறுப்பினைக் கூட்டுறவு இயக்கத்தினிடம் ஒப்படைக்க இருக்கும் இச் சமயத்தில் அரசாங்கத்தின் அச்சத்தையும், தயக்கத்தையும் நாம் உணர்கின்றோம். ஆனால் இப்பிரச்னையினை ஆழமாக நோக்குங்கால் 1942-ல் இருந்து கூட்டுறவு இயக்கம் அரசாங்கத்தினை கைவிட்டிருக்கின்றதா என...



அளவிலே கூட்டுறவு இயக்கத்திலே பங்குபற்றவில்லை என்பது உண்மை. கூட்டுறவு இயக்கத்தின் மூலம் இளைஞர்களின் பிரச்னைகளைத்தீர்த்து அவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்யலாமென நாம்உறுதியாக நம்புகின்றோம். இன்று அவர்களின் மத்தியிலே விரக்தி மனப்பான்மை நிலவுவதனுல் அமைதியின்மை தாண்டவமாடுகின்றது. இந்நிலைமையை மாற்றி கூட்டுறவு இயக்கத்திற்கு புது இரத்தத்தை ஏற்றும் பொருட்டு உயர்தரப் பாடசாலைகளில் கூட்டுறவு ஒரு தனிப்பாடமாகக் கற்பிக்கப்படவேண்டும் என்றும்,பல்கலைக்கழகங்களில் அதற்கென தனித்துறை நிறுவப்படவேண்டுமெனவும் நாம் மீண்டும் வற்புறுத்துகின்றோம்.

இன்றைய பின்னணியில் வீடமைப்பு பொருளியலாளர் கூறுவதுபோல சமூக முதலீடுமட்டுமன்று, பொருளாதாரமுதலீடுமாகும் கூட்டுறவு இயக்கமூலம் வீடமைப்பு பிரச்னையைப் பெருமளவிற்குத்தீர்க்கலாம். நிதியும் ,காணியுமே இப்பிரச்னையின் எல்லைக்கட்டுகளாகும் தனியானகூட்டுறவுவீடமைப்புச்சங்கங்கள்நிறுவப்படவேண்டுமென்றும் அண்டையிலுள்ள சில நாடுகளிற்

## ஜெயராஜ் எழுதுவது

கூட்டங்களிலே பேசுபவர்களுக்கும் பாடுபவர்களுக்கும் மாலைகள் போட்டு மரியாதை செய்யும் வழக்கம் இருக்கிறதல்லவா? மாலைகள் போடுவதற்குப் பதிலாக அவர்களுக்கு நல்ல புத்தகங்களை அளிக்கலாமென்று சென்னையில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் நல்ல யோசனையொன்று கூறப்பட்டுள்ளது.

திருநெல்வேலி சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகத்தின் விழாவில்தான் அந்த யோசனையைத் தெரிவித்தவர். அக்கழகத்தார் நூற்றுக்கணக்கான நூல்களை வெளியிட்டுள்ளனர். ஆனால் பெரும்பாலான நூல்கள் விலை போகவில்லையாம் இலங்கையில்தான் இப்படி என்று நினைத்தேன் ஆனால் கழகப் பதிப்புகளின் கதையும் இதுதானும். மூன்று முதல் ஐந்து அல்லது பத்து ரூபாய்க்கு பூமாலைகள் வாங்கி பேச்சாளருக்கு கழுத்தில் போடப்போகும் போதே இரண்டு கைகளாலும் தடுத்து கைகளில் அதை வாங்கிக் கொண்டு பக்கத்தில் வைத்துவிடுவதுதான் பண்பு என்று பலரும் நினைக்கின்றனர். எவ்வளவு கஷ்டப்பட்டு மலர்களைச் சேர்த்து அழகைத் தொடுத்துக்கட்டிய மாலைகளையும் இவ்விதம் பயன்படுத்தாமல் தூர வைப்பது என்ன பண்போ! பணம்போட்டு மாலை வாங்கியவருக்கும் மாலைகளைக் கட்டியவருக்கும் இதைப் பார்க்க எப்படி இருக்கும்?

மாலை போடுவதற்குப் பதில் மதுரையிலே நல்ல அங்கவஸ்திரம் போட்டதை பார்த்தேன். சென்றமாதம் அளவெட்டிக்கு ஹவாய்த்தீவிலிருந்து வந்திருந்த மாஸ்டர் சுப்பிரமுனியா வந்திருந்தபோது அங்கு பேசியவர்களுக்கும் பாடியவர்களுக்கும் எப்படி மரியாதை செலுத்தினர்கள் தெரியுமா? மாலைபோடவில்லை. அதற்குப் பதில் கொழும்புத்துறை முனிவர் யோகர் சுவாமிகள் இயற்றிய 'நற்சிந்தனை' நூலை ஒவ்வொருவருக்கும் கையெழுத்திட்டு அன்பளிப்பாகக் கொடுத்தார் அப்பெரியார். மாலையாக இருப்பின் சில மணி நேரத்தில் வாடிப் வற்றை அழகாக பயனுள்ள முறையில் எழுதியிருக்கிறார். 'மாணவரின் சுவர்க்கம்' என்ற தலைப்பில் அவர் எழுதிய கட்டுரை என் மனதை இழுத்தது. 'நார்வே, ஸ்வீடன், டென்மார்க்' முதலிய நாடுகள் யாத்திரிகருக்கும், தொழிலாளருக்கும் மட்டுமல்ல. மாணவருக்கும் சுவர்க்கமாகும். அந்நாடுகளில் மாணவர்களுக்குக் கிடைக்கும் வசதிகளும் சலுகைகளும் அமெரிக்காவுள்ளிட்டு வேறெந்த நாடுகளிலும் கிடைக்கவில்லை. சிறப்பாக நார்வேயிலுள்ள மாணவர்கள் மகிழ்ச்சியுடன் கவலையின்றி வாழுகின்றனர். அவர்களுக்கு என்னென்ன வசதிகள் கிடைக்கின்றன தெரியுமா? (1) பல ஒட்டல்களிலும் அவர்களுக்குக் குறைந்த விகிதத்தில் சாப்பாடு (2) சுகாதார இன்ஷூரன்சும் மிகக் குறைந்த விகிதத்தில் அதாவது ஒரு வாரத்துக்கு 30 சதம்தான். (3) சனி ஞாயிற்றுக்கிழமைகள் தவிர மற்ற நாட்களில் சினிமாக்களில் பாதிக்கட்டணமே. (4) நாடகங்கள், சங்கீதக்கச்சேரிகள், நடனங்கள் முதலியவற்றுக்கும் குறைந்த கட்டணம், (5) கலைக்கண்காட்சிகளுக்குப் பாதிக்கட்டணம். (6) மக்கள் மியூஸியம் காட்சிச்சாலைகளுக்கு இலவசமாகச் செல்லலாம், பொதுமக்கள் குளிக்கும் அறைகளில் பாதிக்கும் குறைந்த கட்டணம்

இவை மட்டுமல்லபல்கலைக்கழகத்தில் கட்டாயமெதுவுமில்லை. மாணவர்களே கான்டீன் என்னும் உணவுச்சாலைகளை நடத்துகின்றனர். சாப்பாடு ஒரு ரூபாய் 35 சதம் தான். ஒஸ்லோ பல்கலைக்கழகத்தில் மாணவர்களே இரு புத்தகக் கடைகளையும் பிரசுரசாலையையும் நடத்துகின்றனர் வெளிநாடுகளிலிருந்து புத்தகங்கள் தருவித்து அடக்க விலைக்கு மாணவர்களுக்குக் கொடுக்கின்றனர். பூட்ஸ் கடையில் சாமானுக்கு மட்டும் பணம் கொடுத்தால் போதும். மாணவர் சங்கம் பூட்ஸ் செய்பவருக்கு சம்பளம் அளிக்கின்றது. இன்னும் எவ்வளவோ (இவையெல்லாம் பின்னர் விபரமாக 'ஈழநாடு' பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுக்கொடியான தான் ... கள் அச்சிடப்படுவதாலும் கேள்விகள் அம்பலமாவதில் வியப்பில்லை. கண்காணிப்பில் ஒரு சிறு பிழை விட்டாலும், ரகசியம் அம்பலமாகி, ... யாகும். கல்விமான்கள் கூடி பரீட்சை விஷயமாகத் தக்க சீர்திருத்தம் செய்ய வேண்டிய சமயம் வந்து விட்டது.

செயல் எல்லையும் நன்கு தெரியும். வடபகுதிக் கூட்டுறவு இயக்கத்தின் வரலாற்றைப் பற்றியும், அதன் முயற்சிகள் பற்றியும் விரிவாக எடுத்துரைப்பதற்கு இது தக்க

# பாடசாலைகளில் கூட்டுறவு தனிப்பாடமாக்க வேண்டும்

## மாநாட்டிற்கு வரும் பிரேரணைகள்

யாழ்ப்பாணம், சனி

"கூட்டுறவு ஒரு தனிப் பாடமாகப் பாடசாலைகளில் போதிக்கப்படுவதுடன் அதற்கு பல்கலைக்கழகங்களிலும் தனித்துறை அமைக்கப்படவேண்டுமென மறுமுறையும் இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இன்று நடைபெறவிருக்கும் கூட்டுறவு மகாநாட்டில் மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை கூட்டுறவுவிநியோக சங்கம், மேற்கண்ட பிரேரணையை சமர்ப்பிக்கவிருக்கிறது.

காலையில், வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபைத் தலைவர் திரு. இ. இராசரத்தினம் தலைமையிலும் பிற்பகல் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. எம். ரி. டபிள்யூ. அமரசேகரா தலைமையிலும் கூட்டுறவு மகாநாடு நடைபெறும்.

இம்மகாநாட்டில் திருநெல்வேலி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் கீழ்க்காணும் பிரேரணையை சமர்ப்பிக்கவிருக்கிறது: சங்கங்கள் 9 வீதத்திற்கு மேற்படாத பங்குவட்டியை வழங்கும் முகமாக கூட்டுறவுச் சட்டத்தைத் திருத்தியமைக்குமாறு கூட்டுறவுக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரை இம்மகாநாடு கேட்டுக்கொள்கிறது.

மயிலிட்டி ஆனந்தா கூட்டுறவு கடற்றொழிலாளர் கடனுதவி விற்பனவுச் சங்கத்தின் பிரேரணை: கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வலைகளையும், மீன்பிடி உபகரணங்களையும், விநியோகிக்க வேண்டுமென கடற்றொழில் அமைச்சரை இம்மகாநாடு கோருகின்றது.

பாஷையூர் கடற்றொழிலாளர்கூட்டுறவுக்கடனுதவி விற்பனைச் சங்கத்தின் பிரேரணை: சங்கு, கடலட்டை சுருப்பிலி ஆகியவற்றை ஏற்றுமதிசெய்யும் ஏக உரிமையினை வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திற்கு வழங்கவேண்டுமென இம்மகாநாடுவலியுறுத்துகின்றது.

புனித அந்தோனியார் கடற்றொழிலாளர் கூட்டுறவு கடனுதவிவிற்பனவுச்சங்கத்தின் பிரேரணை: ஆழ்கடல் மீன்பிடிக்கு அதிகவேகமுடைய இயந்திரங்கள் அத்தியாவசியமானபடியால் இவ்வியந்திரங்களையும், உதிரிப்பாகங்களையும், கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்கள் மூலம் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென கடற்றொழில் அமைச்சரை இம்மகாநாடு கோருகின்றது.

யாழ்ப்பாணம் மலையாள புகையிலை கூட்டுறவு விற்பனைச்சங்கத்தின் பிரேரணை: பீடிஉற்பத்தியாளருக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பீடிக்காப்பிலையை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும்போது வடமாகாணத்திற்கான ஏகவிநியோக உரிமை யாழ்ப்பாணம் மலையாள புகையிலை கூட்டுறவு விற்பனைச் சங்கத்திற்கு அளிக்கவேண்டுமென கூட்டுறவுக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரை இம்மகாநாடு வேண்டுகிறது

மற்றும் ஒன்பது பிரேரணைகள் இம்மகாநாட்டில் சமர்ப்பிக்கப்படவிருக்கிறது.

......

## ஆலோசனைச் சபை நிர்வாகிகள்

மன்னர், வியா

மன்னர் சுகாதாரக் காரியாலய ஆலோசகர் சபைத் தலைவர்தெரிவு காரியாலயத்தில் நடைபெற்றது. இச்சபையில் ஐவர் இடம்பெறுகின்றனர் சபையின் தலைவராக பொதுச் சுகாதாரப்பரிசோதகர்களிலிருந்து போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்ட திரு. ஈ. நடராசா ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி சிவகுரு

ஊரெழுவைச் சேர்ந்தவரும், தற்சமயம் கொக்குவிலில் வசித்தவருமான சின்னத்தம்பி சிவகுரு காலமாகிவிட்டார் இவர் அன்னம்மாவின் அன்புக்கணவரும், கோட்டைப் புகையிரதப்பகுதி சிவப்பிரகாசம், கொழும்பு கூட்டுறவு மொத்தவிற்பனை நிலையத்தைச் சேர்ந்த அருட்பிரகாசம், கொழும்பு கல்வியமைச்சைச் சேர்ந்த செல்வப்பிரகாசம், கல்கறுநோயா தபாலகத்தைச் சேர்ந்த சித்தி விநாயகப்பிரகாசம், ஆண்டியாகலை வைத்திய நிலையத்தைச் சேர்ந்த அப்போதிக்கரி செல்வவிநாயகப்பிரகாசம் ஆகியோரின் தகப்பனும், சந்திரவதனா, அகிலாண்டேஸ்வரி, பரமேஸ்வரி, செல்வமலர், தேவகி ஆகியோரின் மாமனுமாவர். சமச்சடங்கிற்காக அன்னாரின் பூதவுடல் 26-12-70 சனிக்கிழமை பிற்பகல் நாலுமணியளவில் கொக்குவில் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

2171

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 26-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வியாபாரம்பெருக
விளம்பரம் செய்க

படுவது மனித இயல்பு. ஆனால், முழுமொத்தமாக நோக்கும்போது கூட்டுறவு இயக்கம் அரசுக்கும் மக்களுக்கும் தனது கடமையைச் செவ்வனே நிறைவேற்றியுள்ளதென்பது உண்மை.

ஐக்கிய முன்னணி அரசு தனது அரியணைப் பேச்சில் தேசிய பொருளாதார அபிவிருத்தியில் கூட்டுறவு இயக்கத்திற்கு முக்கியத்துவம் அளிப்பதாகக் கொடுத்த வாக்குறுதியினைச் செயற்படுத்த முனைந்தமை கூட்டுறவாளர்களுக்கு உற்சாகமளிக்கின்றது வடபகுதியிலுள்ள நாம் பலகாலமாகக் கூறி வந்த ஆலோசனை இப்போது ஏற்றுக்கொள்ளப் பட்டமையையிட்டு குறிப்பாக மகிழ்ச்சியடைகின்றோம் அத்தியாவசிய உணவுப்பொருள் மொத்த விநியோகத்தினை தனியார் துறையிடமிருந்து பொறுப்பேற்று கூட்டுறவு இயக்கத்திற்கு அதனையளிப்பதென்ற முடிவினை நான் கண்டு குறிப்பிடுகின்றேன். மறுசீரமைப்புத்திட்டத்தினை இங்குள்ள கூட்டுறவாளர்கள் ஆராய்வதற்கென பல ஆலோசனைக்கூட்டங்களை நடாத்தினர் அதற்குப்பின்னர் வடபகுதிக் கூட்டுறவாளரின் தூதுக்குழுவொன்று கூட்டுறவு ஆக்க ஆணையாளரைப் பேட்டி கண்டு தமது கருத்துக்களைத் தெரிவித்தது. மறுசீரமைப்புத்திட்டத்தின் பொது எல்லைக்கோட்டினை நாம் வரவேற்கின்றோம். ஆனால் அதே சமயம் சில ஊறு விளைவிக்கக்கூடிய அம்சங்களை நாம் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

அனுபவம் வாய்ந்த கூட்டுறவாளர்கள் என்ற முறையில் இவ்வம்சங்களை நாம் சுட்டிக்காட்டாவிடின் கூட்டுறவு இயக்கத்தையும், அரசாங்கத்தையும் பொறுத்த வரையில் நாம் எமது கடமையிலிருந்து தவறியவர்களாவோமென திடமாக நம்புகின்றோம். கூட்டுறவு இயக்கம் உண்மையில் குடியாட்சிப் பாங்கானது. ஆதலால் கூட்டுறவு இயக்கத்தின் குடியாட்சித் தன்மையினை எக்காலங்களிலும் எல்லா மட்டங்களிலும் பேண வேண்டுமென்பது மறுக்கவொண்ணாத உண்மை கூட்டுறவுக் குடியாட்சி பேணப்படாவிடின் சங்கம் கூட்டுறவுச் சங்கமாகவே விளங்காது. கூட்டுறவுச் சங்கம் உறுப்பினர்களுடைய சொத்து. ஆதலால் அதன் வெற்றியையும் தோல்வியையும் தாங்கவேண்டிய பொறுப்பு அவர்களையே சாரும், இதனால்தான் தமது அலுவல்களை நிர்வகிப்பதற்கு ஓர் குழுவினைத் தெரிவதற்கு அவர்களுக்கு உரிமை இருந்

சாங்கம் வேண்டிய சட்ட அதிகாரங்களை இயற்றலாம். அனைத்துலக ரீதியாக இலங்கைக் கூட்டுறவு இயக்கம் ஓர் அளவுக்கு நல்ல பெயரைச் சம்பாதித்துள்ளது. கூட்டுறவு இயக்கத்தின்மீது வலோற்காரத்தினைப் பயன்படுத்த முனைந்தால் இலங்கைக் கூட்டுறவு இயக்கம் மீது அரசாங்கம் நம்பிக்கை இழந்து விட்டதென கூட்டுறவு உலகம் எண்ணுவதற்கு இடமுண்டு எனவே, மறுசீரமைப்புத் திட்டத்தில் அடங்கியுள்ள இவ்வம்சத்தினை புனராலோசனை செய்யுமாறு கௌரவ அமைச்சரை வற்புறுத்துகிறோம்.

இன்னொரு விடயம் பற்றியும் நாம் கண்டு குறிப்பிட விரும்புகின்றோம் புதிய பெரிய ஆரம்பச்சங்கங்கள் அமைக்கப்படும்வரை அவற்றின் நெறியாளர் குழுக்கள் தெரிவு செய்யப்படும்வரை பதிவு அழிக்கப்பட்ட சங்கங்களை உத்தியோகத்தர்களே நிருவகிப்பார்கள் என அறியப்படுகின்றது. இப்போதுள்ள சங்கங்கள் புதிய உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு நெறியாளர் குழுக்கள் தெரிவுசெய்யப்பட்டு புதிய சங்கங்கள் அமைக்கப்படும் வரை இயங்க அனுமதிக்கப்படுமானால் இதைத்தவிர்க்கலாம் என நாம் கருதுகின்றோம். கூட்டுறவு இயக்கம் மக்கள் இயக்கமாக இருப்பதால் அக்கருத்தை மிக ஆரம்பத்திலிருந்தே மக்களுக்கு அறிவுறுத்தவேண்டும். அப்போதுதான் அவர்களின் ஆர்வத்தை இயக்கத்தின் வளர்ச்சிக்காகப் பயன்படுத்தலாம். எனவேதான் தெரிவுசெய்யப்பட்ட குழுக்கள் ஆரம்பத்திலிருந்து இயங்கவேண்டுமென நாம் வலியுறுத்துகின்றோம்.

புதிய அமைப்பிலே மாவட்ட சமாசங்களுக்கு வலுவூட்டி அவற்றின் தொழிற்பாட்டு எல்லைகள் விசாலிக்கப்படவேண்டுமெனவும் நாம் இங்கு வலியுறுத்த விரும்புகின்றோம். இச்சமாசங்கள் தமது பகுதியிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களிடையே இணைப்பை ஏற்படுத்தி கல்வி கலாச்சாரப் பிரசாரப் பணிகளில் சேர்ந்துழைத்துபயன்மிக்க சிறந்தசேவை யாற்றலாம்.

இன்றைய மகாநாட்டில் முன்மொழியப்படும் பிரேரணைகள் தாமாகவே விளங்கிக்கொள்ளத்தக்கவை. ஆனாலும், ஒரு முக்கிய விடயம்பற்றி தொட்டுக்காட்ட விரும்புகின்றேன். இளமைப் பிராயத்திலேயே இளைஞர்களைக் கவர்வது மிகமுக்கியம் என்பதனை எல்லோரும் உணர்வர். ஆனால் அவப்பேறாகஇன்றையஇளந்தலைமுறை திருப்திகரமான

மளவிற்குத் தீர்க்கலாம். நிதியும், காணியுமே இப்பிரச்சினையின் எல்லைக்கட்டுகளாகும் தனியானகூட்டுறவுவீடமைப்புச்சங்கங்கள்நிறுவப்பட வேண்டுமென்றும் அண்டையிலுள்ள சில நாடுகளிற் போன்றுஒரு கூட்டுறவு வீடமைப்புச்சங்கச் சம்மேளனம் நிறுவப்பட வேண்டுமென்றும் நாம்ஆலோசனை கூற விரும்புகின்றோம். தேசிய வீடமைப்புக்கென அரசாங்கத்தினால் ஒதுக்கப்படும்நிதிகளில் 50 வீதம் கூட்டுறவு வீடமைப்புச் சங்கங்கள் மூலம் வழங்கப்பட வேண்டும் ஆனால் இப்படி ஒதுக்கப்படும்நிதி போதியதாக இல்லாததினால் வேண்டிய நிதியினைத் திரட்டுவதற்கு அரசாங்க உத்தரவாதத்துடன் தேசிய கூட்டுறவு வீடமைப்புச் சம்மேளனம்கடன் பத்திரங்களை வழங்குவதற்கு அனுமதிக்கப்பட வேண்டுமென நாம் தகவுரைசெய்கின்றோம்.

கூட்டுறவுத் தோழர்களே! நாம் இன்று ஒருபுதிய ஊழியின் நுழைவாயிலில் நிற்கின்றோம். கூட்டுறவு இயக்கத்திலே நம்பிக்கை வைத்துள்ள அரசாங்கம், இவ்வியக்கத்தின் மூலம் மக்களின் பொருளாதார சமூகப் பிணிகளைக் குணப்படுத்தலாமென எதிர்பார்க்கின்றது. கடும்உழைப்பின் மூலமும் நேர்மையின் மூலமும் தன்முனைப்பாற்றலின் மூலமும் கூட்டுறவாளர்களாகிய நாம் எம்மீது அரசாங்கம் வைத்துள்ள விசுவாசத்திற்கேற்ப நிலைமைக்கேற்ப வாறு நடக்க நம்மைத் தயாராக்கிக் கொள்ளவேண்டும்.

இறுதியாக நாம் கூறியுள்ள தகவுரைகள் நாம் அவற்றினை எடுத்துரைத்த மனப்பான்மையுடன் நோக்கப்படவேண்டுமென எதிர்பார்க்கின்றோம். மறுசீரமைப்புத்திட்டம் விசைத்திறம் வாய்ந்ததாய் இருக்க வேண்டுமென்ற வேணவாவின் உந்தலினாலேயே இத்தகவுரைகளை நாம் எடுத்தியம்பியிருக்கின்றோம்; ஆக்கபூர்வமான பகுப்பாராய்வில் இருந்து துளிர்க்கும் மனப்பான்மையுடன் தான் இவை இங்கு சுட்டப்பட்டுள்ளன. பொதுமக்களுக்கு நற்பயனளிக்கும் முற்போக்குத்திட்டங்களைச் செயற்படுத்துவதில் நாம் ஒத்துழைக்க என்றும் ஆயத்தமாக இருக்கின்றோம் குடியாட்சிப்பாங்கான சமூக உடைமையின்சாரம்தான் கூட்டுறவு என்பதனைவலியுறுத்த வேண்டியதில்லை. நாம் மற்றவர்களைச் சுரண்டுவதுமில்லை மற்றவர்கள் எம்மைச்சுரண்டுவதையும் அனுமதிப்பதில்லை. பணக்காரருக்கும் வறியோருக்கும்

யோகர் சுவாமிகள் இயற்றிய 'நற்சிந்தனை' நூலை ஒவ்வொருவருக்கும் கையெழுத்திட்டு அன்பளிப்பாகக் கொடுத்தார் அப்பெரியார். மாலையாக இருப்பின் சில மணி நேரத்தில் வாடிப்போகும். ஆனால் அன்று அளித்த நற்சிந்தனை நூலோ தலைமுறை தத்துவமாக வீட்டில் இருந்து படிப்போரனைவருக்கும் நல்வழி காட்டி நன்மை புரியுமல்லவா?

சென்னைக் கூட்டத்தில் கூறப்பட்ட அந்த யோசனையை அவவெட்டி காரியத்தில் முன்கூட்டியே செய்துவிட்டது. இந்த மேலான வழியை மற்றவர்களும் பின்பற்றினால் நல்ல புத்தகங்கள் விலைபோவதுடன் அவை பலருக்கும் நன்கு பயன்படுவதாகவுமிருக்கும். புத்தகங்களை அச்சடித்து வைத்தும் விலை போகாமல் இருந்தால் நூல் எழுதியவருக்கும் வெளியிட்டவருக்கும் எப்படியிருக்கும், இலாபம் வேண்டாம் நஷ்டமாவது இல்லாமல் இருக்க வேண்டாமா? ஆகவே கூடுமானவரை பல சந்தர்ப்பங்களிலும் சிறப்பாக இங்கு வெளியாகும் நூல்களை அன்பளிப்பாகக் கொடுப்பதென்ற பழக்கத்தை ஏற்படுத்த வேண்டுமென்றே இதை எழுதலானேன். அப்படிச் செய்பவர்கள் பேச்சாளரையும் பாடல்களையும் கௌரவிப்பதுடன் ஈழத்திலே நல்ல நூல்கள் வெளியாவதையும் ஆதரித்தவர்களாவர்.

0 0 0

உலகத்தை 25 முறை சுற்றிய சமன்லால் (பிக்ஷூ) என்ற பெரியார் 'உலகமே என் கல்விக்கூடம்' என்ற தலைப்புடனே தாம் கண்ட

இடையேயுள்ள இடைவெளியை அமைதியானவழியிலே நிரப்புவதற்கு கண்ணின்மணி போன்ற கூட்டுறவுக் கொள்கைகளை நாம் கடைப்பிடித்து வருகின்றோம், ஒருவர் பலருக்காகவும் பலர் ஒருவருக்காகவும் என்ற பொன்மொழியை நடைமுறைப்படுத்த நாம் முயன்று வருகின்றோம்.

டும் பணம் கொடுத்தால் போதும். மாணவர் சங்கம் பூட்ஸ் செய்பவருக்கு சம்பளம் அளிக்கின்றது. இன்னும் எவ்வளவோ (இவையெல்லாம் பின்னர் விபரமாக 'ஈழநாடு' பத்திரிகையில் வெளியாகும்)

மாணவர்களே நாட்டின் மேலான செல்வங்கள். அவர்களுக்கு இவ்வளவு வசதிகளெல்லாம் அளிப்பதாயின் அவர்கள் திருப்தியுடன் நிம்மதியாக வாழ்ந்து கல்வி கற்பார்கள். கூடாத காரியங்களில் அவர்கள் மனம் செல்லுமா? மாணவர்கள் ஏதும் கிளர்ச்சி செய்வதாயின் அதற்கு அடிப்படையில் ஏதோ பெரிய குறை இருக்கவேண்டும். அதை அனுதாபத்துடன் கண்டறிந்து நீக்குவது தான் அறிவுடைமையாகுமல்லவா?

......

## சென்னை இசை ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வாணி மகாலில்:

பிற்பகல் 3-30 சீதாலஷ்மி வெங்கடேசன் - பாட்டு.

இரவு 6-00 ரி. ஆர். மகாலிங்கம் புல்லாங்குழல்,

மியூசிக் அக்கடமி சார்பில் அக்கடமி மண்டபத்தில்:

பிற்பகல் 1-30: பேபி கஜாத்திரி — வீணை

பிற்பகல் 3-00: பி எஸ். நாராயணசாமி — பாட்டு.

பிற்பகல் 5 30: ஸ்ரீமதி கமலா —- பரதநாட்டியம்,

இரவு 8-30 டி.கே. ஜெயராமன்-பாட்டு (இமை. நிரு)

## யாழ். மிருதங்க வித்துவான்

சுழிபுரம், வெள்ளி

சென்னை தமிழ் இசைச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்று வரும் இசைவிழாவில் பங்குபற்றி பிரபல இசை வித்துவான்களுக்கு மிருதங்கம் வாசிக்க வட்டுக்கோட்டையைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ அ. கணேச சர்மா இந்தியா சென்றுள்ளார்,

சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகளின் கதாப்பிரசங்க நிகழ்ச்சிக்கும்இவரேமிருதங்கம் வாசிப்பாராம்.

## அறிவித்தல்

எமது ஸ்தாபனத்தில் விற்பனை பிரதிநிதியாகக் கடமையாற்றிய திரு. நாகநாதன் இராமநாதன் 3-10-70 லிருந்து எமது சேவையில் இல்லாததால் அவரது செயல்கள் எவற்றிற்கும் நாங்கள் பொறுப்பாளிகளல்லரென்பதை இத்தால் அறியத் தருகிறோம்.

யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம்
420, ஆஸ்பத்திரி வீதி ... யாழ்ப்பாணம்.

2704